## அரசு ஊழியர்

செப்டம்பர் 2017

மலர் : 38 இதழ் : 9

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


சூடா ஒரு கோப்பை சூப்

## துடுப்பா? கொடிமரமா?

நாம்,
தூர்ந்து கிடக்கிற ஒரு
துறைமுகத்தில் கட்டிப்போட்ட
கட்டுமரத்தின் துடுப்பாக
இருப்பதைக் காட்டிலும்,
ஆழந்தெரியாத சமுத்திரத்தில்
அலைகளையும்,
புயல்காற்றையும்
எதிர்த்துச் செல்லும்
ஒரு கப்பலின்
கொடி மரமாக இருப்போம்!

– வெ.சாமிநாதசர்மா

# போராட்டங்கள் தோற்றதில்லை! அடக்குமுறைகள் வென்றதில்லை!

“அரசு ஊழியர்கள் – ஆசிரியர்கள் இதுவரை பெற்ற உரிமைகள் அனைத்தும் அரசின் காருண்யத்தாலோ, கருணையினாலோ கிடைத்ததல்ல. மாறாக அளப்பரிய தியாகங்களினாலும், அர்ப்பணிப்பு உணர்வுடன் நடத்திய போராட்டங்களாலும், அரசின் ஆக்டோபஸ் கரங்களிலிருந்து பறிக்கப்பட்டவையாகும்”

– தோழர் எம்.ஆர்.அப்பன்

அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் 8வது ஊதிய மாற்றம், 20 சதவீத இடைக்கால நிவாரணம், புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்தல் உள்ளிட்ட வாழ்வாதார கோரிக்கைகளை வலியுறுத்தி போராடுவதற்கு ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பின் சார்பாக அரசின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு 18.7.2017 அன்று அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் எழுச்சியோடு மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் லட்சக்கணக்கில் கலந்து கொண்டு தங்களது எதிர்ப்பை அரசுக்கு தெரிவித்தனர்.

அதன்பிறகு மாபெரும் ஆர்ப்பாட்டம் 5.8.2017 அன்று சென்னையில் மிக கோபாவேசத்துடன் நடைபெற்றது. இந்த போராட்டத்தில் அரசின் அடக்குமுறை, காவல்துறை அடக்குமுறையை மீறி வரலாறு காணாத அளவிற்கு 1,50,000க்கும் மேற்பட்ட ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் கலந்து கண்டன முழக்கமிட்டனர். அனைத்து ஊடகங்களும் பிரமிக்கின்ற வகையில் செய்தி வெளியிட்டன. ஆனாலும் அரசு மௌனம் காத்தது.

இனியும் பொறுக்க இயலாது என 22.8.2017 அன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்து அனைத்து வட்டத் தலைநகரங்களிலும் மிக எழுச்சியான ஆர்ப்பாட்டம் ஜாக்டோ-ஜியோவால் நடத்தப்பட்டது. இந்தப் போராட்டத்தில் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் கலந்து கொண்டு அரசுக்கு எச்சரிக்கை விடுத்தனர். எந்தவித அசைவும் அரசிடம் இல்லாத நிலையில் 29.8.2017 அன்று கூடிய ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பு திட்டமிட்டபடி கோரிக்கைகளை வென்றெடுக்க செப்டம்பர் 7 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் மிக சக்தியாக நடத்துவது எனவும், 7ஆம் தேதி வட்டத் தலைநகரங்களில் மறியல் செய்வது எனவும், 8ஆம் தேதி மாவட்டத்

தலைநகரங்களில் மாபெரும் மறியல் போராட்டம் நடத்துவது எனவும், தொடர் போராட்டங்கள் குறித்து 10.9.2017 அன்று கூடி முடிவெடுப்பது எனவும் ஜாக்டோ-ஜியோ முடிவு செய்துள்ளது.

அரசு ஊழியர் சங்க ஸ்தாபக தலைவர் தோழர் எம்.ஆர்.அப்பன் சொன்னதுதான் மீண்டும் நிரூபிக்கப் படவுள்ளது. ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் தங்களது வாழ்வாதார கோரிக்கைகளை இதுவரை போராட்ட களத்தில்தான் வெற்றி பெற்றிருக்கிறது என்பதை அவரது வரிகள் உணர்த்துவதோடு, 1988 மற்றும் 2003ல் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் கூட்டமைப்பை உருவாக்கி, நடத்தி வெற்றி பெற்றது நம் கண் முன்னால் நடந்துள்ள உண்மையாகும்.

ஆம்! 1988 போராட்டம் மகத்தான வரலாறு படைத்த போராட்டம். சிலர் சொன்னார்கள் மத்திய அரசுக்கு இணையான ஊதியம், போனஸ் கோரிக்கை கள் சாத்தியமற்றது என. அதுமட்டுமல்லாது, கவர்னர் ஆட்சியில் போராட்டம் நடத்தினால் வெற்றி பெற முடியாது என கூக்குரலிட்டனர். போராட்டம் வேண்டாம் என்று சொன்னார்கள். ஆனாலும், நமக்கு நம்பிக்கை பிறந்தது. போராடினால் வெற்றி கிடைக்கும். அதுவும் கூட்டு சக்தியுடன் போராடினால் மிகப்பெரிய வெற்றியை பறிக்கலாம் என நமது தலைவர்கள் முடிவு செய்து ஆசிரியர், அரசு ஊழியர்கள் பேரமைப்பை உருவாக்கி வீரம் செறிந்த காலவரையற்ற வேலை நிறுத்தம் ஜூன் 1988ல் தொடங்கியது. உற்சாகத்துடனும், நம்பிக்கையுடனும் வேலை நிறுத்தம் சக்தியாக நடந்தது. இந்திய வரலாற்றிலேயே 31 நாட்கள் தீரத்துடன் வேலை நிறுத்தம் நடந்தது.

அப்போதைய ஆளுநர் பி.சி.அலெக்சாண்டர் பல்வேறு அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விட்டார். தலைவர்கள் கைது, தற்காலிக பணி நீக்கம், மறியல், பேரணி, முற்றுகை. ஆனாலும் ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் அசரவில்லை. இறுதியில் சென்னை யில் அண்ணாசாலையில் மிகப் பிரம்மாண்டமான முற்றுகை. பெண் ஆசிரியைகள் உட்பட ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் சாலையில் படுத்து முற்றுகை போராட்டம் நடத்தினர்.

ஆளுநர் குதிரைப் படையை அனுப்பி மிரட்டினார். சென்னை ஸ்தம்பித்தது. சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டது. அனைத்து எதிர்க்கட்சிகளும், தொழிற் சங்கங்களும் நமக்கு ஆதரவளித்தன. மிரண்டு போன ஆளுநர் அடக்குமுறையை கைவிட்டு சிறையி லிருந்த தலைவர்களை விடுவித்து பேச்சுவார்த்தை நடத்தி கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதன்பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு மத்திய அரசுக்கு இணையான ஊதியமும், போனசும் வழங்கியது. மகத்தான போராட்டத்தினால் அனைத்து நடவடிக்கைகளும் கைவிடப்பட்டன. வேலை நிறுத்த காலம் விடுப்பாக வரன்முறை செய்யப்பட்டது. ஆளுநர் அரசிடம் போராட்டம் நடத்தினால் வெல்ல முடியாது என்பதை ஆசிரியர்-அரசு ஊழியர் கூட்டமைப்பு நெஞ்சுறுத்தி, அளப்பரிய தியாகத் துடன் நிரூபித்து இந்த கூட்டணி முதல் முறையாக வெற்றி பெற்றது. போராட்டம் தோற்கவில்லை. அடக்குமுறை தோல்வியடைந்தது.

பல தியாகங்களையும், அர்ப்பணிப்புகளையும் செய்து போராடி பெற்ற அரசு ஊழியர்-ஆசிரியர் உரிமைகளான சரண்டர் பறிப்பு, போனஸ் பறிப்பு, ஜிபிஎப் முன்பணம் 50 சதவீதமாக குறைப்பு, ஓய்வூதிய பலன்கள் பத்திரமாக வழங்குதல், ஓய்வூதிய தகுதிகாலங்கள் உயர்த்தியது, கம்யூ டேசன் குறைப்பு, இதைவிட உச்சமாக வேலை நியமன தடைச் சட்டம் ஆகிய உத்தரவுகளை அன்றைய அரசின் முதல்வர் ஜெயலலிதா அம்மை யார் அவர்கள் பிறப்பித்தார். அது மட்டுமல்லாது, 1.4.2003 முதல் பணியில் சேர்ந்தவர்களுக்கு புதிய ஓய்வூதியத்திட்டத்தை அறிமுகப்படுத்தி அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களின் உரிமைகளை பறித்தார்.

கோபமடைந்த ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் இரண்டாவது முறையாக ஜாக்டோ-ஜியோ என்ற அமைப்பை உருவாக்கினர். பல வடிவங்களில் அரசுக்கு எச்சரிக்கை செய்தும் கண்டுகொள்ளாத அரசை எதிர்த்து உரிமைகளை வழங்கக் கோரி அடையாளமாக போராட்டம் நடத்தினார்கள். எந்த நடவடிக்கையும் எடுக்காத முதல்வர் ஜெயலலிதா சட்டசபையில் கோபத்துடன் எச்சரிக்கையும் விடுத்தார். இரும்பு பெண்மணி இவரது ஆட்சியில் போராடி வெற்றி பெற முடியாது என்று சிலர் ஏகடியம் பேசினர். இதனை முறியடிக்க ஜாக்டோ-ஜியோ வியூகம் வகுத்து பறிக்கப்பட்ட உரிமைகளை பெற 2.7.2003 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் அறிவித்தது.

திட்டமிட்டபடி 2.7.2003ல் வேலை நிறுத்தம் எழுச்சியோடு துவங்கியது. நமக்கு எதிராக எழுதி வந்த பத்திரிகைகள் கூட "அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் சாதித்தார்கள்" என எழுதின. தலைமைச் செயலக சங்க ஊழியர்கள் '1.7.2003 அன்று முன்கூட்டியே வேலை நிறுத்தத்தில் இறங்கி போராட்டத் தீயை வளர்த்து விட்டனர். தினம் தினம் அடக்குமுறையை சந்தித்தோம். தினந்தோறும் கைது நடவடிக்கைகள்.

சினம் கொண்ட முதல்வர் ஜெயலலிதா 1,76,000 பேரை டிஸ்மிஸ் செய்தார். தலைவர்கள் சிறை வைக்கப்பட்டனர். வேலை நிறுத்தம் குறித்த தகவல் நீதிமன்றத்திற்கு சென்றது. நீதிமன்றம் 6072 பேரை நிறுத்தி வைத்து எஞ்சியோர் வேலைக்கு செல்ல உத்தரவிட்டது. டிஸ்மிஸ் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு சங்கம் மாதந்தோறும் நிகர சம்பளம் வழங்கியது. நீதிமன்றம் விசாரணை மேற்கொண்டது.

999 பேரை நிறுத்தி எஞ்சியோர் தண்டனையுடன் வேலைக்கு திரும்பினர்.

அந்த நேரம் அதிமுக அரசு பாராளுமன்றத் தேர்தலை சந்திக்க வேண்டியிருந்தது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அரசின் அடக்குமுறையை எதிர்த்து, ஊழியர்களை அரசியல்படுத்தி பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க செய்து "பகை முடிக்கும் பணி முடிக்கும்" செயலை மேற்கொண்டோம். அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீதான அடக்கு முறை அந்தத் தேர்தலில் அதிமுகவுக்கு ஒரு இடம் கூட கிடைக்க முடியாமல் செய்தது. தேர்தலை எதிர்கொண்ட தமிழக முதல்வர் பறித்த உரிமைகள் அனைத்தும் திரும்ப பிப்ரவரி 2004 திரும்ப வழங்கினார். 50 சதவீத அகவிலைப்படி அடிப்படை ஊதியத்துடன் இணைத்தார். நிறுத்தி வைக்கப்பட்ட ஊழியர்கள் அனைவரும் வேலைக்கு திரும்ப உத்தர விட்டார்.

தேர்தலில் தோல்வியை கண்டவர் வேலை நியமன தடைச் சட்டத்தை திரும்பப் பெற்றார். அதன்பிறகு நடந்த சட்டமன்றத் தேர்தலிலும் அதிமுக தோற் கடிக்கப்பட்டது. அடுத்து வந்த திமுக அரசு வேலை நிறுத்தம் செய்த காலத்தை பணிக்காலமாக வழங்கியது. பாதிக்கப்பட்ட அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் அனைவரும் திரும்ப வேலைக்கு சென்றனர். பறிக்கப்பட்ட உரிமைகள் திரும்ப பெறப் பட்டது. ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பின் வேலை நிறுத்தப் போராட்டம் இரண்டாம் முறையாக வென்றது. அடக்குமுறை தோல்வியுள்ளது.

முதலில் நீண்ட கால கோரிக்கையான மத்திய அரசு வாங்கும் போனஸ் போன்றவற்றிற்காக ஜாக்டோ-ஜியோ போராடும் பொழுது கவர்னர் அரசு என்றார்கள். இதனை முறியடித்தோம். அடக்குமுறைகள் அத்தனையும் தோல்வியடைந்தது. இரண்டாவதாக பறிக்கப்பட்ட உரிமைகளுக்காக போராடும்பொழுது பலமான சர்வாதிகாரியிடம் மோதினால் கோரிக்கைகள் வெற்றிபெற முடியாது என்றார்கள். அத்தனை அடக்குமுறைகளையும் மீறி வென்றெடுத்தோம். இரண்டு போராட்டத்திலும் பாதிக்கப்பட்டேன் என்று ஒருவர் கூட இன்று வரை கூறவில்லை.

இப்பொழுது மீண்டும் ஊதிய மாற்றம், புதிய பென்சன் ரத்து உள்ளிட்ட வாழ்வாதார கோரிக்கை களை அரசு நிறைவேற்றத் தவறியதால் மீண்டும் மூன்றாவது முறையாக ஆசிரியர், அரசு உழியர்கள் இணைந்து ஜாக்டோ-ஜியோ என்ற பேரமைப்பை உருவாக்கி போராடுகிறோம். இந்த காலகட்டத்தில் 4,75,000 புதிய ஊழியர்கள் புதிய பென்சன் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். 1709 பேர் இறந்துள்ளனர். 3000 பேர் ஓய்வு பெற்றுள்ளனர். ஒருவருக்கு கூட பென்சன் வரவில்லை. ஊதிய பங்குத் தொகை ரூ.9000 கோடி, அரசு பங்குத் தொகை ரூ.9000 கோடி. மொத்தம் ரூ.18000 கோடி எங்கே உள்ளது என்று தெரியவில்லை.

இதனை வலியுறுத்தி நடந்திட்ட போராட்டங் களின் விளைவாக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அம்மையார் அவர்களால் போடப்பட்ட குழு காலாவதியாகியுள்ள நிலையில் புதியதாக குழுவை அமைத்துள்ள தமிழக அரசு. இது ஏமாற்று வித்தை. அம்மாவின் வழியில் ஆட்சி நடத்தும் தமிழக அரசு அம்மாவின் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறி யுள்ளது. இதைனால்தான் இந்த காலவரையற்ற வேலை நிறுத்தம். இப்போதும் சிலர் சொல்கிறார்கள். அரசியல் சூழலை சரியில்லை என்று. அது தவறு. 1988ல் கவர்னர் அரசு போராடக் கூடாது என்றார்கள். 2003ல் அடக்குமுறை ஆட்சியாளர் என்றார்கள். எம்.ஆர்.அப்பன், "நியாயமான கோரிக்கைகளை கூட்டுப் போராட்டம் வெல்லும் என்றார். இப்பொழுது அரசியல் சூழ்நிலை என்கிறார்கள்.

ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் ஊதிய மாற்றம், 20 சதவீத இடைக்கால நிவாரணம், புதிய பென்சன் ரத்து, சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம், மதிப்பூதியம் ரத்து செய்து காலமுறை ஊதியம் வழங்க வலியுறுத்தி நடைபெறும் போராட்டமும் 1988, 2003 போன்ற சூழ்நிலைகளை கடந்து எத்தகைய அடக்குமுறையையும் சந்தித்து 2017ல் போராட்டம் வெல்லும்.

ஆம், போராட்டங்கள் என்றென்றைக்கும் தோற்ற தில்லை! அடக்குமுறைகள் வென்றதில்லை! ❖

## பணி நிறைவு வாழ்த்துக்கள்



**அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநிலத் தலைவரும், தமிழ்நாடு வணிகவரிப் பணியாளர் சங்கத்தின் முன்னாள் மாநிலத் தலைவருமான இரா.தமிழ்செல்வி அவர்கள் 31.08.2017 அன்று அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். ஓய்வு காலத்திலும் அவருடைய சமூகப் பணி தொடர தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.**

# தானம் - நிதானம்

**ச**மீபத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க முன்னாள் பொதுச் செயலாளரும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சங்க தலைவருமான இரா.முத்துசுந்தரம் இயற்கை எய்தியதை முன்னிட்டு, அவருடைய உடல், அவருடைய விருப்பத்தை நிறைவேற்றும் வகையில், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மைய அலுவலகம் இயங்கும் சென்னை திருவல்லிக் கேணியில் உள்ள கட்டிடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, எந்தவித மத சடங்குகளும் செய்யப்படாமல், இறுதி ஊர்வலம் நடத்தப் பட்டு, சென்னை மருத்துவக்கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் மருத்துவக் கல்லூரி நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. ஒரு நெகிழ்ச்சியான நிகழ்வு. வாழும்வரை வார்த்தைக் கும் வாழ்க்கைக்கும் வேறுபாடின்றி வாழ்ந்த தலைவர், இறப்பிற்கு பின்னரும் தன் உடல் மருத்துவ மாணவர்களின் படிப்பிற்கு / ஆராய்ச் சிக்கு பயனடைய வேண்டும் என நினைத்து அதனை செயல்படுத்த குடும்பத்தினரையும் தயார்படுத்தியது வியப்பான செயல். “ தான் வாழ்ந்த சமூகத்திற்கு தன்னால் இயன்ற நல்லதைச் செய்தேன் என்ற திருப்தி ஒருவனின் இறுதிக் காலத்தில் இருக்குமென்றால், அதுவே அவன் வாழ்ந்த வாழ்க்கைக்கான அர்த்தமாகும் “ என கடந்த ஆயிரம் ஆண்டுகளில் இம் மண்ணில் வாழ்ந்து மறைந்த மேதைகளில் ஆகச் சிறந்தவர் என போற்றப்படும் மாமேதை காரல்மார்க்ஸ் கூறினார். இரா.முத்துசுந்தரமும் தன் வாழ்க்கைக் கான அர்த்தத்தை இம் மண்ணில் உள்ள மக்களுக்கு நிரூபித்துள்ளார் என்பது மறுக்க இயலாத உண்மையாகும். இதே போல் மேற்கு வங்கத்தின் முதல்வராக எந்தவித அப்பழுக்கு மின்றி மக்கள் சேவையாற்றிய முதல்வர் ஜோதிபாசுவும் தன் உடலை தானம் செய்தார். இதுபோல் பலர் மக்களுக்கு முன்மாதிரியாக செயல்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் உடல் தானம் செய்வதில் பல இடையூறுகள் இருந்தன / இருக்கின்றன. உடல் தானம் செய்ய விரும்புவர் தன் வாரிசுச் சான்றுடன், வாரிசுகளின் ஒப்புதலை சமர்ப்பித்தால் மட்டுமே உடல்தானம் ஏற்கப்படும் என்ற விதி இருந்தது. வாரிசுச் சான்று வழங்கவேண்டிய வருவாய்த் துறையோ வாரிசுச் சான்று என்பது ஒருவர் இறந்த பின்னர்தான் வழங்க இயலும் என கூறிவிட்ட நிலையில், நாகையிலிருந்து ஊடக நண்பரின் முயற்சியால் “அப்போதைய துணை முதல்வர் ஸ்டாலின் தன் உடலை தானம் செய்வதாக ஒப்புதல் தந்ததை ஏற்றுக்கொண்ட அரசு அதிகாரிகள், சாதாரண மக்கள் தருவதையும் ஏற்க வேண்டும்” என தன் பத்திரிக்கை வாயிலாக அரசின் கவனத்திற்கு இப்பிரச்சனையை கொண்டு சென்றதின் விழைவாய், பொருந்தாத அவ்விதி நீக்கப்பட்டது. இப்பொழுது வாரிசுச் சான்று தேவை என்ற விதி இல்லாமல் உடல் தானம் பெறப்படுகின்றது..

இப்பொழுதும் உடல் தானம் பெறுவதில் பல்வேறு இடற்பாடுகள் இருக்கவே செய்கின் றன. மதம் சார்ந்த நம்பிக்கைகள், சடங்குகள், சாத்திரங்கள் இதனை ஏற்பதில்லை. மறைந்தவரின் உடல் மண்ணில் மக்கலாம், தீயில் எரிக்கப் படலாம், கங்கை போன்ற ஆறுகளில் வீசப் படலாம். ஆனால் மக்களின் எதிகாலத்தை புணரமைக்க, நோயினின்று காக்க பயிலும் மாணவர்களுக்கு தரப்படக்கூடாது என்பதில் உறுதியாக உள்ளனர். உடலியல் குறித்த பல ஆராய்சிகளை மேற்கொண்டு, அதன் வழியே பல உண்மைகளை எடுத்துச் சொல்லி, இன்றைக்கும் மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு வேதப் புத்தகமாக திகழும் “தி ஹியூமனி கார்போரிஸ் ஃபேப்ரிகா” என்ற நூலை எழுதியுள்ள ‘உடற்கூறியல் தந்தை’ என அழைக்கப்படும் “ஆண்ட்ரியஸ் வெசாலியஸ்” அவர்களுக்கு இதற்கான ஆராய்சியை மேற்கொள்ள உடல்கள் கிடைக்கவில்லை என்பதும், அவர், கல்லறை களில் தகனம் செய்யப்பட்ட பிணங்களை பிறர் அறியாமல் தோண்டியெடுத்து, அந்த உடல் களைக் கொண்டு ஆராய்சிகளை மேற்கொண்டு, இந்த உலகம் பயனுற பல உண்மைகளைக் கண்டறிந்து சொன்னார் என்பதையும் நினைக்கை யில் மிகப் பெரிய வியப்பாகவும் மலைப்பாகவும் உள்ளது.

தானமாக பெறப்படும் உடல் மருத்துவக் கல்லூரிகளில் முதலில் கெட்டுப் போகாமல் இருக்க உரிய ஏற்பாடு செய்யப்படும். அப்படி உள்ள உடல்கள் கடேவர் என்று அழைக்கப்படும். அந்த கடேவரின் உதவியால் மருத்துவ மாணவர்கள் மனிதரின் உடற்கூறு தொடர்பாக

படிப்பை மேற்கொள்வார்கள். குறைந்தபட்சம் ஒரு மருத்துவ மாணவர் தன் மருத்துவர் படிப்பை முடிக்க ஓரிரு உடலையாவது அறுத்து பார்த்து உடலின் உட்பகுதியில் உள்ள அனைத்து உறுப்பு களையும் சந்தேகமின்றி தெரிந்துகொண்டால் மட்டுமே, எதிர்காலத்தில் மக்களுக்கு சிகிச்சை யளிக்கும் பொழுது அவர் உடலின் தன்மை குறித்தும், இவர் அளிக்கும் சிகிச்சை அந்த உடலில் ஏற்படுத்தப்போகும் மாற்றங்கள் குறித்தும் உணர்ந்து அதற்கொப்ப சிகிச்சையளிக்க இயலும். அது இல்லாமல் வெறும் ஏட்டுச் சுரைக்காயாக மருத்துவக் கல்வி பயின்று வரும்பொழுது, அவர் எப்படி ஒரு தரமான மருத்துவராக மாற இயலும். ஆக மருத்துவம் பயிலும் மாணவர்கள் தரமான மருத்துவராக வெளியில் வர மேற்குறிப்பிட்ட கடேவர்கள் அதிகபட்ச எண்ணிக்கையில் தேவையாகும்.

ஆனால், உடல் தானம் பெறுவதில் உள்ள நடைமுறை சிக்கல்களால் கடேவர்கள் கிடைப்பது குறைவு. இன்னும் உடல் தானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய சூழல் அதிகரித்து வருகின்றது. ஆனால், வாழும் காலத் தில் பெற்றோரை கவனிக்காமல், அவர்களின் தேவைகளை நிறைவேற்றாமல், அவர்களுக்கு தான் வசிக்கும் இல்லத்தில் இடம் தராமல், பெற்றோரை முதியோர் இல்லத்திற்கு அனுப்பி விட்டு, அவர்களின் மறைவிற்குப் பின்னர், அமாவாசை, திவசம், நினைவு நிகழ்ச்சி, நினைவு அஞ்சலி விளம்பரம் வெளியிடும் கலாச்சாரம் அதிகரித்துவரும் இக்காலச் சூழலில், பாரம் பரியம், கலாச்சாரம், தர்மம், சாஸ்திரம், சம்பிரதாயம் என்ற நம்பிக்கைகள் அதிகரித்துவரும் இன்றைய காலகட்டத்தில் மறைந்தவரின் உடலை தானமாகப் பெறுவது ஆகப்பெரிய சிரமமே. எங்கோ லட்சத்தில் ஒரு முத்துசுந்தரங்கள் தோன்றி னால் அது அதிசய நிகழ்வாக பார்க்கப்படுகின்றது.

உடல் தானம் என்பதர்க்கும், உடல் உறுப்பு தானம் என்பதர்க்கும் வேறுபாடு உண்டு. மூளை செயல் இழந்த நிலை என்பதை நவீன மருத்துவம் மரணம் என பார்க்கின்றது. மூளை செயலிழந்த நிலையில், மீண்டும் நினைவு திரும்புவதற்கு வாப்பில்லை என்ற நிலையில், எதிர்பாராமல் ஏற்படும் விபத்துகளின் விளைவாக உடலின் மூளையைத் தவிர இதர உறுப்புகள் செயல்பாட்டில் உள்ள நிலையில், அந்த செயல்பாட்டில் உள்ள உறுப்புகளை தேவைப்படு வோரின் உடலில் பொறுத்த பெறப்படுவது உடல்



உறுப்பு தானமாகும். அதுகுறித்த விழிப்புணர்வை சமீபத்தில் செய்யப்பட்ட இதயமாற்று அறுவை சிகிச்சைகள் ஓரளவிற்கு ஏற்படுத்தின. பயனற்று போகும் இதயம் வேறு ஒருவரின் உடலில் பொறுத்தப்படும் பொழுது அந்த இதயம் பல்லாண்டுகள் உயிர் வாழ்கின்றது என்பதை உணர்த்தினாலே பல மாற்றங்கள் வரும். கண் தானம் குறித்து நல்ல விழிப்புணர்வு மக்களுக்கு எட்டியுள்ளது.

நாளுக்கு நாள் உயர்ந்துவரும் மக்கள் தொகைக்கேற்ப மருத்துவர்கள் தேவை அதிகரித்து வரும் சூழலில், தரமான மருத்துவரை உருவாக்க தேவைப்படும் காரணிகளில் ஒன்றாக இருக்கும் கடேவர்கள் அதிகம் மருத்துவக்கல்லூரிகளுக்கு கிடைக்க உடல் தானம் குறித்த விழிப்புணர்வு அதிகரிக்கப்பட வேண்டிய அதே நேரத்தில், தமிழகம் முழுவதும் 350 -க்கும் மேற்பட்ட அரசு மருத்துவமனைகள் செயல்பட்டுவரும் நிலையில், ஒவ்வொரு நாளும் கேட்பாரில்லாத பிணங்கள் அனாதை பினம் என்ற அடிப்படையில் சற்றொப்ப சராசரியாக மாதம் 10 -க்கும் மேற்பட்ட பிணங்கள் அந்தந்த நகராட்சி மற்றும் உள்ளாட்சி நிறுவனங் களால் அடக்கம் செய்யப்படும் நிலை உள்ளது. அப்படிப்பட்ட உடல்கள் அனைத்தையும், மருத்துவ ஆராய்சிக்கு பயன்பெறும் வகையில், மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுப்பிவிடுவது என அரசு கொள்கை முடிவெடுத்து உரிய வழிகாட்டு ஆணைகளை வெளியிட வேண்டும். இப்பொழு தும் மருத்துவக் கல்லூரியில் கிடைக்கும் கேட்பாரில்லாத பிணங்களில் சிலவற்றையே கடேவர்களாக பயன்படுத்தி வருகின்றனர் என்பது எதார்த்தமே. ஆனால் அரசு கேட்பாரில்லாத பிணங்கள் குறித்து ஒரு முடிவெடுத்து, அப்படி பெறப்படும் உடல்களை பாதுகாக்க உரிய வசதிகள் அனைத்து மருத்துவக்கல்லூரிகளிலுல் ஏற்படுத்த வேண்டும். தமிழகத்தில் ஆண்டொன்

றிற்கு சற்றொப்ப 6850 மருத்துவ மாணவர் சேர்க்கை நடைபெறுகின்றது. ஆக ஒரு மாண வருக்கு குறைந்தபட்சம் ஒரு கடேவர் தேவை என்று கணக்கிட்டால்கூட குறைந்தபட்சம் மருத்துவ மேற்படிப்பு மாணவர்களையும் சேர்த்தால் 7000-க்கும் மேற்பட்ட கடேவர்கள் தேவைப்படும். ஆனால் அத்துனை கடேவர்களை வைப்பதற்கு/பாதுகாப்பதற்கு செலவு அதிக மாகுமே எனத் தோன்றலாம். பொறியியல், கலை அறிவியல் உள்ளிட்ட படிப்புகளுக்கு ஏற்படுத் தப்படும் வசதிகளான கட்டிடம், ஆசிரியர்கள் ம்ற்றும் அலுவலகப் பணியாளர்கள் உள்ளிட்ட வசதிகள், அங்கு பயிலும் மாணவர்கள் நலன் சார்ந்தது மட்டுமே. ஆனால் ஒவ்வொரு மருத்துவக் கல்லூரிக்கும் செய்யப்படும் செலவில் விடுதிகள் தவிர்த்து ஏனையவை அனைத்தும் அங்கு நோயாளிகளாக பயன்பெறும் மக்கள் பயன்பெறுவதே அதிகம். மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கு வருடா வருடம் 200 கோடி ரூபாய்க்கும் மேல் தனியார் நிறுவனங்களுக்கு செலவிடும் அரசுக்கு இதற்கான செலவு ஒன்றும் பெரிதல்ல. மருத்துவத்திற்கான செலவு என்பது எதிகால மக்கள் நலனுக்கான முதலீடாகும். உடல் தானம் குறித்த விழிபுணர்வை அதிகரிக்க வேண்டும். அதில் உள்ள கலாச்சார மற்றும் தெய்வ நம்பிக்கைகளிலிருந்து விடுபட்டு உடல் தானம் செய்யப்பட, அரசு பல்வேறு வகைகளில் ஊக்குவிப்பு முயற்சிகளில் ஈடுபட வேண்டும். உடல் தானம் செய்தோர் உரிய முறையில் அரசால் கவுரவிக்கப்பட வேண்டும், உடல் தானம் செய் தோரின் குடும்ப வாரிசுகளுக்கு அரசு வேலை களில் முன்னுரிமை வழங்குவதும், மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையின் பொழுது உடல் தானம் வழங்கியோரின் குடும்ப வாரிசு களுக்கு முன்னுரிமை வழங்க ஆவன செய்யப்பட வேண்டும். வாக்கு வங்கியை பெருக்க பல விதங்களில் மூளையை கசக்கி திட்டங்களை தீட்டி, அரசின் கஜானாவை காலி செய்திடும் அரசுகள், மக்களின் எதிகால நன்மைகளை மனதில் கொண்டு, இப்படிப்பட்ட முயற்சிகளிலும் ஈடுபட வேண்டும். வெறும் கூற்றுக்கு இறையென மாய்ந்து, மண்ணோடும், தீயோடும் கலந்திடும் மனித உடல், மரணத்திற்குப் பின்னரேனும் மக்களுக்கு பயன்பெறும் வகையில் மாற்ற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என நம்புவோமாக!

- **நாகை ஏ.ட்டி.ஏ.**

# துளிப்பா

அடிமை இந்தியா காத்தது
சுதந்திர இந்தியா பறித்தது
காந்தி மண்ணில் மரித்தது

❖

சுதந்திரப் போராளிகள் தோற்றனர்
காட்டிக் கொடுத்தவர்கள் வென்றனர்
மக்கள் உரிமைகளை இழந்தனர்

❖

முப்பத்தொரு விழுக்காடு ஆட்சியில்
அறுபத்தொன்பது விழுக்காடு காட்சியில்
நூறு விழுக்காடு வீழ்ச்சியில்

❖

குல குருக்களின் ஆட்சி
குயுக்திகளின் காட்சி
தகர்த்தலே மாட்சி

❖

மக்களை மறந்த அரசுகள்
மத்தியில் மாநிலத்தில்
மத்தள அடிபடும் மக்கள்

❖

மத்தியில் பச்சை விளக்கு
மனதில் இச்சை கணக்கு
காவிகளின் ஆதிக்க மிடுக்கு

❖

எதிர்க் கட்சியாய் எதிர்த்து
ஆளும் கட்சியாய் அமுலாக்குபவை
பச்சோந்தி அரசியல்

❖

விவசாயிகளுக்கு வழங்கா நேரம்
நடிகைகளுக்கு வழங்கினார்
நாட்டின் பிரதமர்

❖

ஏற்றுமதிக்கு அனுமதி
உள்நாட்டில் தடை
மாட்டரசியலை உடை

❖

அந்நியர் ஆளுகையில் இல்லாதது
நம்மவர் ஆளுகையில் பொல்லாதது
சுங்கச் சாவடி சுரண்டலாவது

- **பெரணமல்லூர் சேகரன்**

# கையிலெடுப்போம் வேலைநிறுத்தம் என்ற வேலை!

# இதுவே, உரிமைகளை மீட்க நாம் ஒன்றுபட வேண்டிய வேளை!

**க**டந்த பத்தாண்டுகளுக்கு மேலாக அரசுத் துறைகளிலும் பள்ளி, கல்லூரிகளிலும் பணிபுரியும் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் ஊதிய முரண்பாடுகளால் வஞ்சிக்கப்பட்டு வருகிறோம். அவை குறித்து பல்வேறு போராட்டங்கள் நடத்தியும் அரசுகள் நம்மை அடிமைகள்போல் நடத்தி வருகின்றன. உரத்துக் குரல் கொடுத்தால், உறுதிமொழி கொடுப்பதும், வாதாடி பார்த்தால் வாய்தா கேட்பதும், போராடி பார்த்தால் பொய்யுரைப்பதுமே அரசின்/அதிகார வர்க்கத்தின் வாடிக்கையாகி விட்டது. 01.01.2016 முதல் அமல்படுத்தப்பட வேண்டிய ஊதியமாற்றமென்பது அரசு அதன் ஆசிரியர்களுக்கு-ஊழியர்களுக்கு செய்ய வேண்டிய சட்டப்படியான தலையாய கடமைகளில் ஒன்றாகும். கேட்காமலேயே வழங்க வேண்டிய அடிப்படை உரிமைகளுக்காக மக்கள் பணிகளுக்கு பாதிப்பில்லாத போராட்டங்களை கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நாம் நடத்தி வருகிறோம்.



ஆனால், அரசு தன் சேவகர்களுக்கு செய்ய வேண்டிய தலையாய கடமையிலிருந்து பிழன்று நம்மை அடிமைகள் போல நடத்திவருகிறது. ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் ஒரு அரசுக்கு அச்சாணி போன்றவர்கள் என்ற உண்மையினை உணராத ஆட்சியாளர்கள், எவ்வித அச்சமும் இன்றி, மக்களுக்கான திட்டங்களைச் செயல்படுத்தும், அரசாங்கம் என்ற பல்லக்கை எவ்வித ஆபத்தும் நேராவண்ணம், அதைத் தங்கள் தோள்களில், நாட்டு மக்கள் நலனுக்காக ஊர்வலம், நகர்வலம் என்று சுமந்து செல்லும் ஆசிரியர்களையும், அரசு ஊழியர்களையும், பணியாளர்களையும் துச்சமென அலட்சியப்படுத்தி வருகிறது. அரசுப் பல்லக்கைத் தூக்கிச் செல்லும் பணியாளர்களுக்கும், ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தோள் வலி கண்டால் பல்லக்கு என்ன ஆகும் என்பதை 2003ஆம் ஆண்டு நடந்த ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பின் வேலை நிறுத்தத்திற்குப் பின்னர் 2006ல் நடந்த பொதுத் தேர்தலில் இந்த நாடே கண்டது என்பதும் வரலாறு.

பல்லக்கை தூக்கிப் பிடிப்பவர்களைப் பசியில் தவிக்கவிட்டு, உள்ளுக்குள் உட்கார்ந்து கொண்டு அரியணைக் கனவுகளில் ஆழ்ந்திருப்பது எவ்வளவு பெரிய ஆபத்தானது என்பதை கடந்த ஒன்றரை வருடங்களாக கடிதங்களாக, கோரிக்கைகளாக, பேச்சுவார்த்தைகளாக, கோரிக்கை சாசனங்களாக ஆசிரியர்-அரசு ஊழியர் இயக்கங்கள் தெரிவித்தும் அதை உதாசீனப்படுத்தி வருகிறார்கள் பல்லக்கு ராஜாக்கள். அவர்கள் எவ்வளவு பெரிய தவறு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்த்தும் விதமாக ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பானது பல போராட்டங்களை நடத்தி ஆசிரியர், ஊழியர்கள் எழுச்சியை திரட்டிக் காட்டியது. 18.7.2017ஆம் தேதி மாவட்டத் தலைநகரங்களில் நடந்த கோரிக்கை ஆர்ப்பாட்டத்தின் மூலமாக ஆயிரக்கணக்கான ஆசிரியர், அரசு ஊழியர்களை மாவட்டத் தலைநகரங்களில் முழக்கமிடச் செய்து, உறக்கத்திலிருந்த அரசு எழுந்து கொள்ள முதல் எச்சரிக்கை செய்தோம்.

கும்பகர்ண உறக்கம் போட்டு, பகல் கனவில் மூழ்கியிருந்த பல்லக்கு ராஜாக்கள் பல்லக்கு தூக்கிகளை அலட்சியப்படுத்தியதுதான் மிச்சம். அதனாலேயே அவர்களுக்கு இரண்டாவது எச்சரிக்கை செய்ய 5.8.2017ஆம் தேதி சென்னையில் இலட்சக்கணக்கான ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் கலந்து கொண்ட கோட்டை நோக்கிய பேரணியை நடத்திட திட்டமிட்டு காவல் துறை அனுமதி மறுத்ததால் அதை உரிமை மீட்பு ஆர்ப்பாட்டமாய் உருமாற்றினோம். வெள்ளத்தனைய ஆசிரியர், அரசு ஊழியர்கள் கூட்டம் சென்னையை குலுங்க வைத்தது. மக்களும், ஊடகங்களும் நம்முடைய பெரும் சக்தியை உணர்ந்த நிலையில், ஆட்சியாளர்கள் மட்டும் அதன் பிறகும் அசைவற்று இருந்தனர். அதுதான் நம்மை 22.08.2017ம் தேதி ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தினை இதற்கு முன் நடந்த போராட்டங்களைவிட பலமடங்கு உத்வேகத்துடன் முன்னெடுத்துச் செல்ல வைத்தது. பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், பணியாளர்கள் உணர்ச்சிப் பிழம்புகளாய், கட்டுக்கோப்பு சிதையாமல் ஒன்றுகூடி, தமிழகத்தில் உள்ள 95 சதவீத அரசுப் பள்ளிகள், கல்லூரிகள், அரசு அலுவலகங்களை வெறிச்சோட வைத்து இதன்மூலம் அரசுக்கு இறுதி எச்சரிக்கை செய்துள்ளோம்.



இவ்வளவுக்குப் பின்னரும் ஆட்சியாளர்கள் புயலைக் கணிக்க இயலாத வல்லுநர்களாக, கல்லுளிமங்கர்களாக, குள்ளநரிக் குழுவினர்களாக, தங்களுக்கான சம்பளம், பதவி மோகம், அதிகார சுகம் போன்றவற்றுக்காக இந்த நாட்டையே கூறுபோட்டு காவு வாங்கிவிட தங்களுக்குள்ளேயான தகராறுகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். புயலைக் கணிக்காத மாலுமிகள் கடலுக்கு இரையாவார்கள் என்பது இயற்கை நியதி.

செப்டம்பர் 7 என்ற எச்சரிக்கை புயல் கூண்டு ஏற்றப்பட்டுவிட்டது என்பதை அரசுக்கு அறிவிக்கும் விதமாக ஜாக்டோ-ஜியோவின் வேலை நிறுத்த ஆயத்த மாநாடுகள் ஆகஸ்ட் 26 மற்றும் 27 தேதிகளில் மாவட்டங்கள்தோறும் வெற்றிகரமாகவும், வெகு எழுச்சியாகவும் நடந்துள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பின் தளபதிகள் அணிதிரண்டு ஒன்றுபட்ட ஒற்றுமையை பறைசாற்றி உள்ளனர். மாறுபட்ட ஒரு அரசியல் சூழ்நிலையில் நாம் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருப்பது நமக்கு வெற்றியைத் தேடித் தருமா என்று நம்மில் சில பேர் வினா எழுப்புகிறார்கள். அவர்கள் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். 1988ல் இதேபோன்றதொரு போராட்டம் நடந்தபோது தமிழ்நாட்டில் கவர்னர் ஆட்சி நடந்து கொண்டிருந்தது. கவர்னர் ஆட்சி நடக்கிறதே என்று நம் முன்னோடிகள் போராடாமல் இருக்கவில்லை. அன்று சென்னையை முற்றுகையிட்ட ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், பணியாளர்களின் மனஉறுதியை, லட்சிய வேட்கையை, குதிரைப் படையின் குளம்பொலிகளும், கண்ணீர் புகைக் குண்டுகளும், குண்டாந்தடிகளும் ஒன்றும் செய்ய முடியவில்லை. மாறாக, கவர்னர் அரசு இறங்கி வந்து பேச்சுவார்த்தைக்கு ஆசிரியர்களை, அரசு ஊழியர்கள் அழைத்துப் பேசி அவர்களுடைய கோரிக்கைகளுக்கு செவி சாய்க்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது அப்போராட்டம்.

இந்த ஆட்சி இன்னும் எத்தனை நாள் நீடிக்கும்? ஈபிஎஸ் இருப்பாரா? ஓபிஎஸ் வருவாரா? டிடிவி தடுப்பாரா? என்ற ஜோதிடங்கள் நமக்குத் தேவையற்றவை. 1.1.2016 முதல் நமக்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய மாற்றங்களுக்கான கோரிக்கை, ஒண்ணே முக்கால் வருடங்களாக வழங்கப்படாமல் மறுக்கப்பட்டிருக்கிறது என்ற ஒற்றை வரி நியாயத்தினை எந்த அரசாங்கமும், அது கவர்னர் ஆட்சியாகவே இருந்தாலும் மறுதலிக்க முடியாது. அதேபோல புதிய பென்சன் திட்டம் கைவிடப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியும், அலுவலர் குழுவின் காலவரையும், புதிய வல்லுநர் குழு என்ற பம்மாத்தும், இனிமேலும் நம்மை ஏமாற்ற முடியாது. தொகுப்பூதியம், மதிப்பூதியம் மற்றும் சிறப்பு காலமுறை ஊதியம் போன்ற கூலி முறைகள் ஒழிக்கப்பட்டு முறையான காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்ற முக்கியமானதொரு வாக்குறுதியை ஊதிய மாற்றத்துக்கான அலுவலர் குழு மேற்கொள்ளும் என்ற சட்டப் பேரவை விதி எண்.110ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பை எந்த ஆட்சியாளரும் ஒதுக்கிவிட முடியாது.

புதிதான கோரிக்கைகளுக்காக நாம் போராடவில்லை. அரசாங்கமே நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்ட கோரிக்கை களை, மத்திய அரசு ஊழியர்கள் பெற்றுவிட்ட ஊதியமாற்றத்தை மாநில அரசும் நிறைவேற்ற வேண்டிய கடப்பாட்டினை வலியுறுத்தியே போராடுகிறோம். நாம் நடத்தும் இந்தப் போராட்டங்கள் நியாயமற்றவை என்று எந்த ஆட்சியாளரும், அரசாங்கமும், அதிகார வர்க்கமும் புறந்தள்ள ஒரு சிறிய காரணம்கூட கிடையாது. IAS, IPS மற்றும் MLAக்களின் சம்பளத்தை, ஓய்வூதியத்தை உயர்த்தி அறிவித்துள்ள இந்த அரசாங்கம், ஆசிரியர், அரசு ஊழியர்களின் ஊதிய மாற்றத்திற்கு நிதிப் பற்றாக்குறையை காரணம் காட்டி இனிமேலும் காலம் கடத்த எந்த தார்மீக உரிமையும் கிடையாது.

ஆகவே ஆசிரியர்களே, அரசு ஊழியர்களே, பணியாளர்களே,

**நம்முடைய லட்சியம் தூய்மையானது**
**நாம் கடலின் மேல் நடக்கலாம்; அமிழ்ந்துவிட மாட்டோம்!**
**நம்முடைய ரௌத்திரம் நியாயமானது**
**நாம் நெருப்பின் மீது நீந்தலாம்; பொசுங்கிவிட மாட்டோம்!**
**நம்முடைய மன உறுதி மலையைவிட பெரிதானது**
**எந்த புயலையும் எதிர்கொள்ளலாம்; விழுந்துவிட மாட்டோம்!**
**நம்முடைய ஒற்றுமை உன்னதமானது.**
**மறுக்கப்படும் எல்லா உரிமைகளையும் வென்று காட்டலாம்;**
**தோல்வியடைய மாட்டோம்! இது சர்வ நிச்சயம்!**

செப்டம்பர் 7, 2017 நம்முடைய இறுதிப்போரின் ஆரம்ப தினம். அன்று முதல் அரசு அலுவலகங்கள், அரசுப் பள்ளிகள், கல்லூரிகள், அனைத்தையும் முடங்க வைப்போம். நம்முடைய நியாயங்களை நிறைவேற்ற மறுக்கும் அரசாங்கத்தை முடக்கி வைப்போம். இலட்சியங்கள் நிறைவேறும் வரை நிர்வாகத்தை நிறுத்தி வைப்போம். நாம் யாரென்று அரசாங்கத்துக்கு உணர்த்தி வைப்போம். கோரிக்கைகள் நிறைவேறும் வரை அலுவலகத்தைப் புறக்கணித்து போராட்டக் களத்தில் ஒன்றுபட்டு நிற்போம்!

**செப்டம்பர் 7 முதல்**

**காலவரையற்ற வேலை நிறுத்தம் வெல்லட்டும்!**

**பல்லக்கில் அமர்ந்து பலதேசம் பார்ப்பவர்களே முதலில்**
**பல்லக்கு தூக்கிகளின் பசியைப் பாருங்கள்**
**பல்லக்கு தூக்குகளுக்கு தோள்வலி கண்டால்**
**பலதேசம் பார்ப்பவனுக்கு வாய்க்குமிடம் பரதேசம் தான்**
**என்பதை நினைவில் கொள்ளுங்கள்.**

**உரிமைகளை வென்றெடுக்க ஒன்றுதிரள்வோம்! வெற்றி காண்போம்! ஆர்ப்பரித்து வாரீர்!! வாரீர்!!!** ❖

# உழைப்பின் மாண்பு



இதைச்செய் அதைச்செய் என்றால்
பார்க்கலாம் என்கிறார்கள்

கண்டிப்பாகச் செய்யவேண்டும் என்றால்
ஏன் அவசரம் என்பதாய்ப் பார்வை

கடமையைச் செய் என்றால்
அதிகாரம் செய்வதாய்க் குற்றச்சாட்டு

அவரவர் அவசரம் அவரவர்கட்டு.
முன்னொரு காலத்தில்
புறாக்காலில் கட்டியக் கடிதம் போல்
எப்போதாவது வந்து சேரும் கடிதம்.

தூங்கி வழியும் அலுவலகச் சூழலில்
பிரித்துப் படித்து
நடவடிக்கை எடுப்பதற்குள்
இழப்புகள் பலவாகிப் பெருகும்.

மனுதாரரின் பசியை/கோரிக்கையை
மனிதாபிமானத்துடன் அணுகும் மாண்பு
விழாக்காலச் சலுகைபோல் மடித்துபோனது.

உழைப்பதற்காகப் பிழைப்பா
பிழைப்பதற்காக உழைப்பா
உணர்வதில்லை எங்கும்.

ஊன்றிக் கேட்டால்
தனது இயலாமை/அறியாமையை மறைத்து
கூடவே வருகிறது
ஆயிரமாயிரம் பிரச்சினைகள்.

சலுகைகளும் இரக்கங்களும்
சாகசங்கள் நிரம்பியவை.

யாருக்குத்தான் இல்லை வேதனைகள்
என்றாலும்
எப்படியாகிலும் வாழவேண்டும் என்பதைவிட
ஏதாகிலும் சாதிக்க வேண்டும் வாழ்வில்.

உழைப்பின் மாண்பினை
உலகு அறியும் முன்னர்
எப்போது உணர்வாய் நீ மானுடா?

**- விழி.பா.இதயவேந்தன்**

«ü,«ì£-T«ò£ «ðóE,° ÜÂñF ñÁŠ¹

# ‘ஏன் அனுமதி மறுக்கக் கூடாது?’ என்பதற்கு கூட்டமைப்பின் விரிவான விளக்கம்

பெறுநர் நாள் : 03.08.2017

**காவல் ஆணையர் அவர்கள்,**
சென்னை பெருநகர காவல் ஆணையரகம்,
வேப்பேரி, சென்னை - 600 007.

அன்புடையீர்,

பொருள் : பேரணி - 05.08.2017 அன்று காலை 10.30 மணியளவில் பேரணி செல்வதற்கு ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பு சார்பில் அனுமதி கோரியமை - காரணம் கேட்கும் குறிப்பாணை வழங்கி பின்னர் அனுமதி மறுக்கப்பட்டமைக்கு விளக்கம் தெரிவித்தல் மற்றும் பேரணிக்கு அனுமதி கோருதல் - சம்பந்தமாக.

பார்வை : 1. எமது கூட்டமைப்பின் 25.7.2017 நாளிட்ட கடிதம்

2. தங்கள் அலுவலக காரணம் கேட்கும் குறிப்பாணை எண்.1023/த.பி.2/2017 நாள் 28.7.2017

3. தங்கள் செயல்முறை ஆணை எண்.1023/த.பி.2/2017-1 நாள் 01.08.2017

4. எமது கூட்டமைப்பின் கடிதம் நாள் 02.08.2017

⋆⋆⋆

எமது ஜாட்டோ-ஜியோ கூட்டமைப்பின் கூட்டம் இன்று காலை (03.08.2017) திருவல்லிக்கேணியில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க அலுவலகத்தில் கூடியது. இக்கூட்டத்தில் ஆகஸ்ட் 5, 2017-ல் பழைய ஓய்வூதியம், 01.01.2016 முதல் செய்யப்பட வேண்டிய ஊதிய மாற்றம், 20 சதவீத இடைக்கால நிவாரணம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக அரசின் கவனத்தை ஈர்த்திட ஆசிரியர்கள் - அரசு ஊழியர்கள் சென்னையில் பேரணி நடத்திட உரிய அனுமதியை பெற்றிடும் வகையில் பெருநகர காவல் ஆணையர் அவர்களுக்கு பார்வை 1-ல் காணும் கடிதம் வாயிலாக அளிக்கப்பட்ட அனுமதி கேட்பு மனுவிற்கு தாங்கள் அனுப்பியுள்ள பார்வை எண். 2-ல் கண்டுள்ள காரணம் கேட்கும் குறிப்பாணை மற்றும் பார்வை 3-ல் கண்டுள்ள அனுமதி மறுப்பு செயல்முறை ஆணை ஆகியவை பரிசீலிக்கப்பட்டது. மேற்படி குறிப்பாணை மற்றும் இறுதி ஆணைக்கு கீழ்க்கண்டவாறு எங்கள் விளக்கம் மற்றும் ஆட்சேபனையினை தெரிவிக்க விழைகிறோம்.

2. 01.01.2016 முதல் செய்யப்பட வேண்டிய ஊதிய மாற்றம், 20 சதவீத இடைக்கால நிவாரணம், புதிய பென்ஷன் திட்டத்தை கைவிட்டு பழைய பென்சன் திட்டத்தை தொடருதல் உள்ளிட்ட கோரிரக்கைகளை வலியுறுத்தி 05.08.2017 அன்று காலை 10.30 மணியளவில் சென்னை அண்ணாசாலை தீவுத்திடல் அருகே உள்ள மன்றோ சிலையிலிருந்து வாலாஜா இல்லம் வழியாக அரசு விருந்தினர் இல்லம் வரை (கோட்டை நோக்கி) பேரணி நடத்திடக் கேட்டிருந்த இடம் மற்றும் பாதை ஏற்பளிக்கப்பட்டவை அல்ல என்று தெரிவித்துள்ளீர்கள். மேற்படி இடத்தில்தான் கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர் சங்கங்கள் ஊர்வலம் நடத்தி வந்துள்ளன. மேலும் பல அமைப்புகளும் ஊர்வலம் நடத்தி வருகின்றன. எமது நினைவுக்கு எட்டிய வகையில் கடந்த 13.06.2012ஆம் தேதி கூட மேற்சுட்டிக்காட்டிய இடம் வழியே வழக்குரைஞர்கள் ஊர்வலம் நடத்தியுள்ளனர் என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.

3. ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பு என்பது பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் தலைமைச் செயலகம் உள்ளிட்ட தமிழக அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அனைத்துத் துறை ஊழியர்களுக்குமான இயக்கமாகும். இக்கூட்டமைப்பு ஏற்கெனவே பலவித போராட்டங்கள், பேரணிகளை நடத்தி ஆசிரியர்-அரசு ஊழியர்களின் பிரச்சனைகளை அரசுக்கு எடுத்துக்காட்டி ஆசிரியர்கள்-அரரசு ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகளை போராடி பெற்றுள்ளது. அந்த உரிமைகளில் பெரும்பாலானவை சாதாரண அரசு ஊழியர்களுக்கு மட்டுமல்லாது ஆசிரியர், அரசு உயர் அதிகாரிகள், காவல்துறை ஊழியர்கள், உயரதிகாரிகள், அரசு செயலர்கள்

உள்ளிட்ட ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் வரை பயனளித்துள்ளன. எனவே, பொது முக்கியத்துவம் வாய்ந்த பழைய பென்சன் திட்டம் உள்ளிட்ட கோரிக்கைகளை அரசாங்கத்தின் தீவிர கவனத்திற்கு கொண்டு வர பேரணி நடத்துவது என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள ஜனநாயகமான முறைதான் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

4. தங்கள் குறிப்பாணை மற்றும் மறுப்பாணையில் முக்கியமான தெருக்களில், சாலைகளில் பேரணி செல்ல அனுமதித்தால் தலைமை செயலகத்திற்கு மனுக்கள் அளிக்க வரும் பொதுமக்களின் சிரமத்தை கருத்திற்கொண்டும், அரசு அலுவலக பணி தங்குதடையின்றி செயல்படுவஜத உறுதி செய்யும் பொருட்டும் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு ஆகியவை குறித்தும் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய அவசியத்தினாலும், போக்குவரத்தின் முக்கியத்துவம், பொதுமக்கள் நலன் கருதியும், சட்டம் ஒழுங்கு/பொது அமைதியை நிலைநிறுத்த தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தினாலும் அனுமதி மறுக்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. நாங்கள் பேரணி செல்ல அனுமதி கோரியுள்ள மன்றோ சிலையிலிருந்து கோட்டை வரை என்பது வாலாயமாக மன்றோ சிலையிலிருந்து அரசு விருந்தினர் மாளிகை வரையிலான பேரணிப் பாதையாகும். (தங்கள் ஆணையில் குறிப்பிட்டுள்ளதுபோல் கோட்டை வரை அல்ல) மேற்படி இடத்தில் பெரும்பாலான தூரம் போக்குவரத்து நெரிசலோ, மக்கள் நெரிசலோ உள்ள இடம் அல்ல என்பதையும், ஆசிரியர்-அரசு ஊழியர் இயக்கங்கள் மேற்படி இடத்தில் இதுவரை பல பேரணிகளையும், ஊர்வலங்களையும் நடத்தி அதில் எந்தவொரு இயக்கத்திலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாகவோ, மக்களுக்கு அசௌகரியம் ஏற்பட்டதாகவோ, சட்டம்-ஒழுங்கு/பொது அமைதிக்கு குந்தகம் ஏற்பட்டதாகவோ அவசர சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு நோயாளிகள் கொண்டு செல்லப்படுவதில் சிரமம் ஏற்பட்டதாகவோ நிகழ்வு இல்லை என்பதையும் இதுவரை நடந்துள்ள பேரணிகள் கட்டுக்கோப்புடன் எந்தவித அசம்பாவிதத்திற்கும் இடம் கொடாமல் நடந்துள்ளன என்பதையும், இந்தப் பேரணியும் அதே முறையில் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் எந்தவித அசௌகரியமோ, அசம்பாவிதமோ ஏற்படாமல் சட்டம்-ஒழுங்கு/பொது அமைதிக்கு குந்தகம் ஏற்படாமல் அமைதியான முறையில் கட்டுக்கோப்புடன் நடக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

5. மேலும், ஊர்வலம் செல்வதற்கு தற்போது அனுமதிக்கப்பட்டு வரும் இடமான ராஜரத்தினம் விளையாட்டரங்கத்திலிருந்து கூவம் நதிக்கரை வழிப்பாதையில் பெரும்பாலான இடமானது சுகாதாரக் கேடுகள் நிறைந்த இடங்களான உள்ளன என்பதையும், தெற்கு கூவம் ஆறு சாலை, மேற்கு கூவம் ஆறு சாலை மற்றும் லாங்ஸ் கார்டன் சாலை வழியாக ஆயிரக்கணக்கான ஆசிரியர்-அரசு ஊழியர்கள் தமிழகத்தில் வெவ்வேறு பகுதிகளில் இருந்து வருபவர்கள் சில மணி நேரம் இருக்க நேர்ந்தால் ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் மற்றும் பாதுகாப்புக்காக வரும் காவலர்களுக்கும் காவல் துறை அதிகாரிகளுக்கும் மோசமான சுற்றுச்சூழல் காரணமாக சுகாதாரக் குறைபாடுகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது என்பதையும் கருத்தில் கொள்ள கேட்டுக் கொள்கிறோம்.

6. மேலும், பொது பேரணி என்பது பொதுமக்கள் நடமாட்டம் உள்ள போக்குவரத்து உள்ள இடமாக இருக்க வேண்டும் என்பதையும் ஒரு மனிதன் தன்னுடைய பேச்சுரிமை, எழுத்துரிமை, வாழ்வுரிமைகளை வாய்மூலமாகவோ, துண்டு பிரசுரம் மூலமாகவோ, படங்கள் மூலமாகவோ சமூகத்திற்கு வெளிப்படுத்த உரிமை உண்டு என்றும், அத்தகைய உரிமைகளை தடை செய்யாமல் அதை எல்லை மீறாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது காவல் துறையினர் கடமை என்றும் இந்திய அரசியல் சாசனமும், இந்திய உச்சநீதிமன்றமும் வலியுறுத்தியுள்ளதை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

7. தங்களது ஆணையில் நாங்கள் பேரணி செல்ல அனுமதி கேட்டுள்ள பாதை யாருக்கும் அனுமதி கொடுக்க நடைமுறையில் இல்லாத பாதை என்றும் எந்தவொரு அமைப்பினருக்கும் நடைமுறையில் இல்லாத பாதையில் ஊர்வலம் செல்ல அனுமதி அளிப்பது கிடையாது என்றும் தெரிவித்துள்ளீர்கள். ஆனால், நாங்கள் கேட்டுள்ள அதே பாதையில் கடந்த 13.6.2012ஆம் தேதி வழக்குரைஞர்கள் பொது ஊர்வலம் நடத்தியுள்ளனர். ஏதோ நெடுநாளாக நடைமுறையில் இல்லாத பாதையில் நாங்கள் பேரணி நடத்த அனுமதி கேட்பதாக விளம்பியிருப்பது உண்மைக்கு மாறானதாகும். தங்கள் ஆணையில் ஏற்பளிக்கப்படாத பாதை என்பதை குறிப்பிடும் பாதை எந்த தேதியிலிருந்து யாருடைய ஆணை மூலமாக செய்யப்பட்டுள்ளது என்பதை தாங்கள் குறிப்பிடாமல் பொத்தாம்பொதுவாக கூறியுள்ளது

*ஏமாற்றமளிப்பதாக உள்ளது.*

*8. இந்திய அரசியலமைப்பு சட்டம் பிரிவு 19(1)-ல் தெரிவிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் குறித்த விளக்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:*

"19. Protection of certain rights regarding freedom of speech, etc.

(1) All citizens shall have the right- **(a) To freedom of speech and expression; (b) To assemble peaceably and without arms;**

(c) To form associations or unions;

(d) To move freely throughout the territory of India;

(e) To reside and settle in any part of the territory of India; [and]

(f) * * * * *

(g) To practise any profession, or to carry on any occupation, trade or business.

(2) Nothing in sub-clause (a) of clause (1) shall affect the operation of any existing law, or prevent the State from making any law, **in so far as such law imposes reasonable restrictions on the exercise of the right conferred by the said sub-clause in the interests of [the sovereignty and integrity of India,] the security of the State, friendly relations with foreign States, public order, decency or morality, or in relation to contempt of court, defamation or incitement to an offence."**

*9.சென்னை மாநகர காவல் சட்டம் பிரிவி 41-ன்படி சென்னை காவல்துறை ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் என்பது எத்தகையதாக இருக்க வேண்டும் என்பது குறித்த சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்புரை மிக முக்கியமானதொன்றாகும். அதில் பத்தி 16, 17 ஆகியவை கூர்ந்து கவனிக்கத்தவை.*

**1999(1) L.W.(Crl) 73 [P.Nedumaran v. State of Tamil Nadu]**

16. The power conferred on the Commissioner under Section 41 of the Madras City Police Act is sweeping, that power is meant to be exercised with great care and caution. The Madras City Police Act is a pre-Constitution enactment, and the powers conferred on the authorities at a time when the country was under the colonial regime, and during the period when suppression of dissent was considered to be a legitimate policy of the State, cannot be exercised after the enactment of the Constitution in the same manner, as it was exercised earlier. The Intelligence Report placed before the Court shows that ***the police still have the attitude which does not seem to recognise that the country is a democratic nation,*** where every citizen has a right to full and equal participation in the process of Government. No citizen can be regarded as an enemy of the State merely because he has voiced a view which is not the one favoured by those in authority.

17. The fact that the police are vested with power should not make them assume that, that power is available for exercise in any manner that they consider fit. That ***power is to be exercised strictly within the ambit of the provisions of the Constitution***, ***more particularly***, the requirement that ***any restriction placed on the exercise of fundamental rights should be a reasonable restriction, and the restrictions so placed should be shown to be essential, having regard to the permissible purpose for which restrictions may be imposed***.

*10. இந்திய உச்சநீதிமன்றம் எஸ்.ரங்கராஜன் - எதிர் - ஜெகஜீவன்ராம் (1989) 2 SCC 574 என்ற தீர்ப்புரையில்இந்திய அரசியலமைப்பு சட்டம் ஷரத்து 19(1)(a) கீழ் வரையரை செய்யப்பட்டுள்ள உரிமை என்பது நியாயமான கட்டுப்பாடுகளுடன் பொதுநல நோக்குடன் சமுதாய அக்கறையுடன் அமைந்திருக்க வேண்டும் என்றும் அத்தகைய கட்டுப்பாடுகள் அரசியல் சாசன ஷரத்து 19(2)ல் உறுதிபடுத்தப்பட்ட உரிமைகளுக்கும் சமூக அக்கறைக்கும் இடையில் சரியான சமநிலையுடன் அமைந்திருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.*

*11. பேரணி செல்லும் பாதையை மாற்றி கொடுப்பதான இதேபோன்றதொரு காரணம் கேட்கும் குறிப்பாணை சம்பந்தப்பட்ட வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் கே.சந்துரு அவர்கள் கூறியுள்ள கருத்துரைகள் நாங்கள் கொடுக்க விழையும் விளக்கத்திற்கு மிகவும் பொருத்தமானதாகும்.*

**W.P.No.14737 of 2012 Dated : 11.06.2012**

[G.Parvendhan v. The State of Tamilnadu and The Commissioner of Police, Egmore, Chennai 600008.]

*"8. ... It is too late for the respondents to refuse permission to hold a rally on a matter of public importance. Even if an order under* ***Section 41 of the City Police Act*** *is in force, it can only be said that it enables the respondents to direct the control and conduct of all assemblies and processions on public road or in the public streets or thoroughfares and to prescribe the Rules by which and the times by which the processions may pass.*

*9. The said provision* ***is only a regulatory power and not a blanket power to strifle any democratic dissent*** *of the citizens by the Police."* என விளக்கமளித்த நீதியரசர் மேற்படி பாதையில் ஊர்வலத்தை அனுமதித்து பின்வருமாறு ஆணையிட்டுள்ளார்.

*"This court is inclined to issue an appropriate direction to the respondents to grant permission to the petitioner to take out the protest rally starting from* ***Monroe Statue in Anna Salai to the Chepauk State Guest House, via Anna Salai Wallajah Road*** *without any way causing any disruption to the public peace and tranquility. It is open to the respondents* ***police to give appropriate police protection*** *and also regulate the procession in the route permitted."*

12. மேலும், மேற்படி வழக்கின் மனுதாரர் கேட்டுள்ள ஊர்வலப் பாதையும் நாங்கள் கேட்டுள்ள பேரணிப் பாதையும் ஒன்றே என்பதை சுட்டிக்காட்ட விரும்புவதோடு, அந்தத் தீர்ப்புரையின் மேற்கண்ட முடிவை தங்கள் கவனத்திற்கு கொண்டு வருவதன் மூலம் தாங்கள் மேற்படி பாதையில் நாங்கள் பேரணி செல்வதை அனுமதிப்பதில் எவ்வித சட்ட சிக்கலோ, சட்டம்-ஒழுங்கு சீர்குலைவோ ஏற்படாது என்பதை உறுதிப்படுத்த விரும்புகிறோம்.

13. ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பு நடத்த உள்ள பேரணி 05.08.2017 அரசு அலுவலக நாள் இல்லை என்பதும் சனிக்கிழமை அரசு விடுமுறை நாள் என்பதையும் இந்த பேரணிக்காக ஆசிரியர்கள்-அரசு ஊழியர்கள் 10.30 மணியளவில் மன்றோ சிலை அருகில் தீவுத்திடலுக்கு ஒட்டியுள்ள இடத்தில் போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல் குழுமி சுமார் 11.00 மணியளவில் பேரணி தொடங்கும். அந்த நேரத்தில் தனியார் அலுவலகங்களும்கூட இயங்க தொடங்கிவிட்டிருக்கும் என்பதாலும், பள்ளி-கல்லூரிகள் விடுமுறை நாளில் இயங்கும்பட்சத்தில் அப்பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவ, மாணவியர் சென்று சேர்ந்து வகுப்புகள் தொடங்கிவிட்டிருக்கும் என்பதாலும் போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் எந்தவித அசௌகரியமும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதையும் தங்களுக்கு விளக்கிடக் கடமைப்பட்டிருக்கிறோம். மேலும், தலைமைச் செயலகம் அன்றைய தினம் விடுமுறை என்பதால் இயங்காது என்ற நிலையில் **"தலைமைச் செயலகத்திற்கு மனுக்கள் அளிக்க வரம் பொதுமக்களின் சிரமத்தை கருத்திற்கொண்டும், அரசு அலுவலக பணி தங்குதடையின்றி செயல்படுவதை உறுதி செய்யும் பொருட்டும், முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு ஆகியவை குறித்து உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய அவசியத்தினாலும்" என தாங்கள் அனுமதி மறுப்பிற்கு பட்டியலிட்டுள்ள காரணங்கள் சாரமற்றவை என்பதை தங்கள் கவனத்திற்கு கொணர விழைகிறோம்.** மேலும் தமிழகம் முழுவதிலுமிருந்து ஆயிரக்கணக்கான ஆசிரியர்-அரசு ஊழியர்கள், நூற்றுக்கணக்கான வாகனங்களில் மேற்படி பேரணிக்கு வரும் நிலையில் போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையூறின்றி வாகனங்களை மெரினா கடற்கரையில் நிறுத்திட நாங்கள் கோரியுள்ள பாதைதான் சரியான தெரிவாக இருக்கும் என்பதையும் தங்களது கவனத்திற்கு கொணர விழைகிறோம்.

14. எனவே 'ஏன் அனுமதி மறுக்கக்கூடாது?' என்ற தங்களின் காரணம் கேட்கும் குறிப்பாணையும் அதனைத் தொடர்ந்த அனுமதி மறுப்பு ஆணையும், மேற்கண்ட காரணங்களினால், நாங்கள் பேரணி செல்லும் பாதைக்கு மறுக்கப்பட்ட ஆணையினை மறுபரிசீலனை செய்து அனுமதி வழங்கிட வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறோம்.

15. மேற்கண்ட எங்கள் விரிவான விளக்கத்தை பரிசீலித்து நாங்கள் கேட்டுள்ள பாதையில், பொது பேரறிணயை அமைதியுடனும், கட்டுக்கோப்புடனும், போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படாத வகையில் நடத்திக் கொள்ள அனுமதி வழங்கிடக் கேட்டுக் கொள்வதோடு பேரணி நடைபெற தக்க பாதுகாப்பினை வழங்கிடக் கேட்டுக் கொள்கிறோம். ❖

# அறியாமலேயே!

அவனுக்காக சுவாசிக்க
அவனால் மட்டுமே முடியும்
அவனறிந்ததுதான்
அவன் பசிக்காக
அவன்தான் உண்ண வேண்டும்
அவனறியாததன்று
அவனுக்காக
அவன்தான் உடுத்த வேண்டும்
அதுவும் தெரியும் அவனுக்கு
அவனது வலிக்காக
அவன்தான் மருந்துண்ண வேண்டும்
அவனறியாததல்ல
அவனது உரிமைக்காக
பிறர் போராடுகையில்
பார்வையாளனாகவே
கடந்து போகிறான்
அவன் ஜடமானதை அறியாமலே

**- பெரணமல்லூர் சேகரன்**

## ஊழியர் விரோத போக்கை கண்டித்து ஆர்ப்பாட்டம்

**சி**வகங்கை மாவட்ட ஆட்சியராக பணிபுரிந்து சமீபத்தில் மாறுதல் செய்யப்பட்ட மலர்விழி இ.ஆ.ப அவர்களின் ஊழியர் விரோதப் போக்கை கண்டித்தும், அவரால் எடுக்கப்பட்ட ஊழியர் விரோத நடவடிக்கைகளை கைவிடக் கோரியும் 29.08.17 அன்று மாலை நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் வருவாய்த் துறை அலுவலர் சங்க மாவட்ட மையம் சார்பில் மாவட்டத் தலைவர் அ.சுந்தரம் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் துவக்கவுரை யாற்றினார். மாவட்டச் செயலாளர் து.இளவரசன் விளக்கவுரையாற்றினார். மாவட்டத் துணைத் தலைவர் ரகு, நாகை வட்டத் தலைவர் ராஜசேகர், மத்திய செயற்குழு உறுப்பினர் து.விஜயராகவன், முன்னாள் மாநிலத் தலைவர் சு.சிவகுமார் ஆகியோர் கண்டன உரையாற்றினர். புள்ளியியல் சார்நிலை அலுவலர் சங்க மாநில பொதுச் செயலாளர் ப.அந்துவன் சேரல், கிராம சுகாதார செவிலியர் சங்க மாநிலச் செயலாளர் பா.ராணி ஆகியோர் வாழ்துரை வழங்கினர். வருவாய்த் துறை அலுவலர் சங்க மாநில துணைத் தலைவர் வெ.சோமசுந்தரம் நிறைவுரையாற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் கா.வைரமுத்து நன்றி கூறினார்.

# (ஏ)மாற்றம்!


சூரியன் மறைந்து நிலவு தோன்றும்
நிலவு மறைந்து சூரியன் உதிக்கும்
காற்று கரைந்து மழை பொழியும்
மழைநின்று பனி பொழியும்
பணி நின்றால் சூடு காயும்
நித்தமும் மாறும் நிஜ உலகில்.


10 ஆண்டுகள் கடந்தும்
ஊழியர்களின் ஊதியம் மாற
அரசு மனம் மாறவில்லையே!
அரசு ஊழியர் சங்க
தலைவர்கள், தலைமைச் செயலகம்
சென்று...
அறிக்கைகள் பல கொடுத்தும்...
ஏன் இந்த தடுமாற்றம்
அரசு ஊழியர்களுக்கு
பெருத்த (ஏ)மாற்றமே!

ஏழாவது ஊதியம் பெற்று
மைய அரசு ஊழியர்கள்
மகிழ்ந்திருக்கும் வேளையில்
மாநில அரசு ஊழியர்கள்
மனதளவில் மகிழ்ச்சி பெற
ஊதிய மாற்றத்தை
உரிமையுடன் கேட்கின்றோம்.

அரசு ஊழியர் சங்கம்
கடைக்கண் பார்வைக்கு
காத்திருக்கும் ஊழியர்கள்
களமிறங்கி போராட
அணிஅணியாய் அணிதிரள்வோம்
வாருங்கள் தோழர்களே!

- **சி.அடைக்கன்**, மதுரை


AISGEF
TNGEA
நினைவேந்தல் மற்றும்
படத்திறப்பு நிகழ்வு


இது இலட்சிய நினைவேந்தலாக இருக்கட்டும்!



# பெண்களுக்கான குடும்ப சட்டங்கள்

சென்ற மாத தொடர்ச்சி...

ஒரு இந்து திருமணம் ஆன மகள் அவருடைய தகப்பனாரின் சொத்தில் பங்கு கேட்கலாமா?

ஆம். இந்து வாரிசு உரிமைச்சட்டம் 1956 பிரிவு 6ன்படி ஒரு மகள் ஒரு மகனுக்கு ஒதுக்கப்பட்ட பங்கு அளவுக்கு, தகப்பனார் சொத்தில் சமமாக பங்கு பெற உரிமை உள்ளவர் ஆவார். மற்றும் அவர் திருமணம் ஆன பின்பும் அதே பங்கை கோர உரிமையுள்ளவர் ஆவார்.

ஒரு இந்து தகப்பனார் மகளுக்கு அவருடைய திருமணத்தின்போது நன்கொடை சொத்து கொடுத்திருந்தால், அவருக்கு அவருடைய தகப்பனார் சொத்தில் பங்கு பெற உரிமையில்லையா?

இல்லை. அந்த நன்கொடை அவரை உரிமையற்றவர் ஆக்காது. அவர் அந்த நன்கொடையை பெற்ற பின்பும் உரிமைப்படி தனது பங்கை கோரலாம்.

ஒரு தத்து எடுக்கப்பட்ட இந்து மகள் குடும்ப சொத்தில் பங்கு பெற உரிமை உள்ளவரா?

ஆம். மகள் என்ற சொல்லில் தத்து எடுக்கப்பட்ட மகளும் அடங்கும். அதனால் அவர் குடும்பத்தில் பங்கு கோரலாம். ஏனெனில் ஒரு இந்து ஆண், பிரிவு 7, இந்து தத்தெடுப்பு மற்றும் வாழ்க்கைப் பொருளுதவி சட்டத்தின்படி ஒரு மகளை தத்து எடுக்கலாம்.

ஒரு இந்து மகள் முறையில்லா மணவழியில் பிறந்திருந்தால் யாருடைய சொத்திலும் பங்கு பெற உரிமை இல்லையா?

இல்லை. ஒரு இந்து மகள் சட்ட முறையில்லா மணவழியில் பிறந்திருந்தாலும், அவருடைய தாயாரிடம் இருந்து சொத்து மரபு உரிமைப்படி பங்கு பெறலாம்.

ஒரு இந்து தாயார் மகளின் சொத்தை மரபு உரிமைப்படி பெறலாமா?

ஆம். ஒரு இந்து தாயார் குழந்தைகள் மற்றும் விதவைக்கு சமமான பங்கை அதே நேரத்தில் மரபு உரிமைப்படி பெறலாம்.

ஒரு இந்து தாயார் மறு திருமணம் செய்து கொண்டால் குழந்தைகளிடமிருந்து பங்கு பெற உரிமை இல்லை என ஆகி விடுமா?

இல்லை. தாயாரின் மறு திருமணம், அவருடைய குழந்தைகளிடமிருந்து மரபு உரிமைப்படி சொத்தை பெற தடை ஏதும் இல்லை.

ஒரு தத்து எடுத்த தாயார் அவருடைய மகனின் சொத்தில் இருந்து பங்கு கேட்கலாமா?

ஆம். ஒரு தத்தெடுத்த தாயாருக்கு ஒரு இயற்கையான தாயாருக்கு உள்ள சமமான உரிமை உண்டு.

ஒரு இந்து தாயார் அவருடைய முறையில்லா மணவழியில் மகனின் சொத்தை வாரிசு உரிமைப்படி பெறலாமா?

ஆம். ஒரு இந்து தாயார் அவருடைய முறையில்லா மணவழியில் மகனிடமிருந்து முதல் தர வாரிசுப்படி சொத்தை பெறலாம்.

ஒரு இந்து தாயார், செல்லா நிலை அல்லது தவிர் தகு திருமணங்கள்படி பிறந்த குழந்தைகளிடமிருந்து சொத்தை மரபு உரிமைப்படி பெறலாமா?

ஆம். இந்து வாரிசு உரிமைச் சட்டம் 1956 பிரிவு 16ல் கண்ட சரத்துப்படி, அவர் செல்லா நிலை அல்லத தவிர்தகு திருமணங்கள்படி பிறந்த குழந்தைகளிடமிருந்து சொத்தை மரபு உரிமைப்படி பெறலாம்.

முன்னாள் இறந்த மகன் அலலது முன்னாள் இறந்த மகளின் ஒரு இந்து மகள் மரபு உரிமைப்படி பங்கு கோரலாமா?

ஆம். ஒரு இந்து மகள் மற்ற முதல் தர வாரிசகள் போலவே அதே நேரத்தில் மரபு உரிமையராக பங்கு பெறலாம்.

ஒரு இந்து மகள் பாகப்பிரிவினையில் பங்கு கோரலாமா?

ஆம். ஒரு இந்து மகள், ஒரு இந்து மகனுக்கு என்ன பங்கு உள்ளதோ அதே போல பங்கு பெறலாம்.

ஒரு இந்து மனைவிக்கு பாகப்பிரிவினையில் பங்கு கிடைக்கக் கூடியதா?

ஆம். மனைவி, பங்காளி கூட்டு சொத்துரிமையர் என்பதால் பாகப்பிரிவினையில் அவருக்கு சம பங்கு உண்டு. ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் இருந்தால் மொத்தமாக சேர்ந்து ஒரு பங்கு பெற உரிமை உள்ளவர் ஆவார்.

ஒரு பாட்டி இந்து சட்டப்படி தன்னுடைய பேரக் குழந்தைகளிடம் இருந்து பாகப் பிரிவினையில் பங்கு பெற உரிமை உள்ளவரா?

ஆம். ஒரு பாட்டிக்கு பேரக் குழந்தைகளின் தகப்பனார் இறந்து விட்டால் சம பங்கு கிடைக்கக் கூடியதாகும்.

தொகுப்பு : குப்ஸ்

நீட் தேர்வில் தமிழக மாணவ, மாணவியர்களுக்கு அநீதி

# விவசாயிகள் இறந்தகாலமும், மாணவர்களின் எதிர்காலமும் வேறுவேறானவை அல்ல; இந்த நிகழ்காலம் இனியும் தொடர அனுமதிக்கக்கூடாது!

- மு.அ.



இந்தியாவில் சமூகநீதிக்கான போராட்டங்களை முன்னெடுத்து மற்ற எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் இட ஒதுக்கீடு, பொது விநியோகம், வேலை வாய்ப்பு வசதி போன்றவற்றில் தனித்துவத் தன்மையுடன் இருந்து வந்த தமிழகம் திரு.நரேந்திர மோடி இந்தியப் பிரதமராக பதவியேற்ற பிறகு சமூகநீதிக்கான தனித்துவத்தையும் வாய்ப்புகளையும் ஒன்றன்பின் ஒன்றாக இழந்து வருகிறது. மோடி அரசின் கொள்கைகள் அனைத்தும் ஏழைத்தொழிலாளர்கள் விவசாயிகள், தினக்கூலிகள், நடுத்தர மக்கள், பொருளாதாரத்தில் பிற்படுத்தப்பட்ட பிரிவினர் என மேட்டுக்குடி தவிர்த்த அனைவரையும் கசக்கிப் பிழிந்து சொல்லொணா துயரத்திற்கு ஆட்படுத்தி, மன உளைச்சலுக்கு ஆளாக்கி வருகிறது. ஏழைகள் உபயோகப்படுத்தும் எரிவாயுவில் தொடங்கி, ரேஷன் பொருட்கள் வரை தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆதார் கட்டாயம் என அலைகழித்தது முதல் அதை வங்கிக் கணக்கில் சேர்க்க வேண்டும் என்றும், வங்கிக்கணக்கிற்கு பான் கார்டு அவசியம் என்றும், ஸ்மார்ட் கார்டு என்றும் படிப்பறிவில்லாத, ஏழை எளிய மக்களை டிஜிட்டல் யுகத்திற்கு கொண்டு செல்கிறேன் பேர்வழி என்று அலைகழிக்கும் போக்குதான் இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. மீனவர் பிரச்சனையாக இருக்கட்டும், விவசாயிகள் பிரச்சனையாக இருக்கட்டும், காவிரி பிரச்னையாக இருக்கட்டும், மாணவர் பிரச்சனையாக இருக்கட்டும் அதில் தமிழகத்தின் நலன்களை புறந்தள்ளி அதற்கு எதிரான நடவடிக்கைகளை கொஞ்சம்கூட மக்களைப் பற்றி சிந்திக்காமல் மோடி அரசு எடுத்து வருவதும், தமிழ்நாட்டிற்கான உரிமைகளை விட்டுக்கொடுக்காமல் போராட வேண்டிய தமிழக அரசோ ''பதவியை பறிக்காமல் ஆட்சியைக் கவிழ்க்காமல் நீ என்ன வேணாலும் செய்துக்கோ'' என்று மத்திய அரசிடம் அடிமைசாசனம் எழுதிக் கொடுத்து விட்டு, மீனவர்கள், விவசாயிகள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என யாரைப்பற்றியும் கவலைப்படாமல் எம்எல்ஏக்களுக்கு சம்பள உயர்வு பென்சன் உயர்வு என தங்கள் நலனையும் ஆட்சி பறிபோகாமல் இருக்க இராப்பகல் பாராமல் கட்சி ஒன்றிணைப்புக்காக கலந்து பேசி தமிழக மக்களை மறந்துபோன நிலையில் செயல்படாத அரசை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நீட் தேர்வில் தமிழக மாணவர்களுக்கு விலக்கு பெற்றுத்தர ஏதோ பெயருக்கு செயல்பட்டிருக்கிறார்கள் என்பதும் அவர்கள் பிரதமரிடமும் மற்ற மத்தியஅமைச்சர்களிடமும் உண்மையில் நீட் தேர்வில் விலக்கு பற்றிதான் பேசினார்களா அல்லது தங்களுடைய ஆட்சிக்கு ஆபத்து வராமல் இருக்க தமிழக நலன்களை விட்டுக்கொடுக்க ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துவிட்டு வந்தார்களா என்று தெரியவில்லை.

சட்டசபையில் நீட் தேர்வு விலக்கிற்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி அதை செய்துமுடிக்க தொடர் நடிவடிக்கைகளை மேற்கொள்ளாமல் விட்டதை அந்த சட்டமன்ற தீர்மானம் குடியரசுத் தலைவருக்கே போய்ச் சேரவில்லை என்ற அறிவிப்பு வந்தபின் அறிந்த தமிழக மாணவர்களும் பெற்றோர்களும் மனம் பதைத்துப் போனதுதான் மிச்சம். அதன்பிறகும் தமிழக அமைச்சர்கள் எவ்வாறெல்லாம் கபட நாடகம் நடித்தார்கள் என்பதை நாடே கவலையுடன் பார்த்துக் கொண்டிருக்கிறது.

குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட தீர்மானம் எங்கே இருக்கிறது என்று தெரியாமல் தேடிக் கொண்டிருந்த வேளையில், போகாத ஊருக்கு வழி சொல்லும் விதமாக இவர்களாகவே ஒரு அரசாணை வெளியிட்டு நீட் தேர்வில் தமிழக அரசின் பாடத்திட்டத்தில் பயின்ற மாணவர்களுக்கு 85 சதவீத உள் ஒதுக்கீட்டை வழங்கினார்கள். மத்திய அரசின் சட்டத்துக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட அவ்வரசாணை நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட பின் உச்சநீதிமன்றம் ஓடினார்கள், அங்கும் அடிவாங்கிய பின் மத்திய அரசிடம் ஏதோ இதற்காகவே தவம் கிடப்பதாக நாடகமாடினார்கள். இவற்றையெல்லாம் நம்பி, கையில் மதிப்பெண் பட்டியலுடன் தமிழக மாணவர்கள் காத்துக்கிடந்தார்கள் அதிர்ஷ்டவசமாகவாவது ஏதாவது நடந்துவிடாதாவென்று.

நிர்மலா சீதாராமன் என்ற மத்திய அமைச்சர் தமிழகத்திற்கு ஒரு ஆண்டுக்குமட்டும் நீட் தேர்விலிருந்த விலக்கு அளிக்க அவசரச் சட்டம் இயற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அறிவிப்பு வெளியிடுவதும் அதை எதிர்த்து மத்திய அரசின் பாடத்திட்டத்தில் பயின்ற மாணவர்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்குதொடர்ந்த போது மத்திய அரசின் வழக்கறிஞர் ஒரு மாநிலத்திற்கு மட்டும் விலக்கு கொடுப்பது என்பது சரியானதாக இருக்காது என்று சொல்வதும் இவர்கள் நடத்திய கபட நாடகத்தின் உச்சம். இதற்குப் பிறகும் தம்பித்துரை போன்ற அதிமுகவின் தலைவர்கள் இதற்காக மத்திய அரசை குறை சொல்ல முடியாது என்றும் நீட் தேர்வு விவகாரம் தொடர்பாக தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்துவோம் என்றும் கொஞ்சம் கூட வெட்கப்படாமல் ஊடகத்திற்கு பேட்டியளிக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் எல்லாம் மருத்துவப்படிப்புக்கு இரண்டு கட்ட கலந்தாய்வுகள் முடிந்துவிட்ட நிலையில் தம்பித்துரை போன்றவர்களின் இன்னும் முயற்சிப்போம் என்ற பேச்சு மக்களிடம் அருவெறுப்பை ஏற்படுத்தி உள்ளது. இதற்கிடையில் தமிழக அரசும் நீட் தேர்வில் தேர்ச்சியான மாணவர்களின் ரேங்க் அடிப்படையில் கலந்தாய்வுக்கு தேதியை அறிவித்துள்ளது.

இந்நிலையில், கலந்தாய்வில் சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரிகளில் ஒரு தமிழக மாணவருக்குக் கூட மருத்துவப் படிப்பிற்கு இடம் கிடைக்கவில்லை என்ற செய்தியும், வேற்று மாநில மாணவர்கள் போலி இருப்பிடச் சான்றிதழ் கொடுத்து தமிழக மருத்துவக் கல்லூரிகளில் இடம் பெற்றிருக்கிறார்கள் என்ற செய்தியும், அரியலூரில் பன்னிரெண்டாம் வகுப்பில் 1176 மதிப்பெண் பெற்றுதேர்ச்சி பெற்ற அனிதா என்ற மாணவி மருத்துவக் கலந்தாய்வில் இடம் கிடைக்காத விரக்தியில் துாக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்ட செய்தியும் தமிழக மக்கள் அனைவரையும் தாங்கொணா துயரத்திற்கு ஆளாக்கியுள்ளது. இதற்கெல்லாம் காரணம் தமிழக அரசின் அலட்சியமும், மத்திய அரசின் அவலட்சணங்களும்தான்.

தமிழகத்தின் சமூகநீதியை சூறையாடப்பார்க்கும் மத்திய அரசின் நயவஞ்சகப்போக்கு, மாநில அரசின் அலட்சியத் தன்மை இவற்றால் காவிரியில் நீர் பெறுவதிலும், கர்நாடகா அணை கட்டுவதிலும், மீனவர்கள் சுட்டு வீழ்த்தப்படுவதிலும், தமிழக மாணவர்களின் உரிமைகளைக் காப்பதிலும் நாம் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டு வருகிறோம். செயலற்றுக் கிடந்தால் கூட பரவாயில்லை ஆனால் நயவஞ்சக மத்திய அரசுடன் நம்பிக்கையான கூட்டாளியாக, ஆட்டுவித்தால் ஆடும் தலையாட்டி பொம்மையாக தமிழகத்தின் அரசும் அமைச்சர்களும் இருப்பதை இனியும் பொதுமக்கள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தால் தமிழகத்தின் தலையாய உரிமைகள் அனைத்தையும் இழந்து நாம் அடிமைகளாகத்தான் வாழ வேண்டி வரும்.

நேற்று விவசாயிகளின் இறந்தகாலமும் இன்று மாணவர்கள் எதிர்காலமும் வேறு வேறானவை அல்ல. இந்த நிகழ்காலம் மிகவும் ஆபத்தானது என்பதை இன்னும் என்ன என்ன உரிமைகளை இழந்து நாம் தெரிந்து கொள்ளப் போகிறோம் என்று தெரியவில்லை. தமிழக மாணவர்களின் எதிர்காலத்தை பாழடித்துவிட்ட, தமிழக மக்களின் உரிமைகளை விட்டுக்கொடுத்துவிட்ட தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது. நீட் தேர்வில் தமிழக மாணவர்களின் நலன்களை குழிதோண்டிப் புதைத்த மத்திய மாநில அரசுகளுக்கு எதிராக நடக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும், போராட்டங்களுக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தன்னுடைய ஆதரவை முழுமையாக பதிவு செய்கிறது. ❖

# ஜாக்டோ-ஜியோ ஆகஸ்ட் 22 வேலை நிறுத்தம்

பழைய பென்சன் திட்டத்தை அமல் படுத்த வேண்டும், ஊதிய முரண்பாடுகளை களைந்து 8வது ஊதிய மாற்றத்தை உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி ஜாக்டோ-ஜியோ சார்பில் ஆகஸ்ட் 22 அன்று தமிழகம் முழுவதும் ஒரு நாள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### கரூர்

ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பின் சார்பில் 26.08.17 சனிக்கிழமை காலை 10 மணிக்கு கரூர் துதி மண்டபம் அரங்கில் வேலை நிறுத்த ஆயத்த மாநாடு சிறப்பாக நடைபெற்றது. மொத்தம் 200 பெண்கள் உள்பட 515 பேர் கலந்து கொண்டனர். மாநில பொறுப்பாளர்கள் தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் திரு.க.மீனாட்சிசுந்தரம், தமிழ்நாடு பதவி உயர்வு பெற்ற முதுநிலை பட்டதாரி ஆசிரியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் பொன்.செல்வராஜ் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் என்.ஜனார்த்தனன் ஆகியோர் கலந்து கொண்டு மூன்று அம்ச கோரிக்கையை வலியுறுத்தி சிறப்புரையாற்றினர். இந்நிகழ்வில் நே.முருகேசன் (உயர்நிலை-மேல்நிலை மாவட்ட தொடர்பாளர்), சு.வேலுமணி (தொடக்கநிலை மாவட்ட தொடர்பாளர்), மு.மகாவிஷ்ணன், மாவட்ட தலைவர், அரசு ஊழியர் சங்கம், ஜியோ மாவட்ட தொடர்பாளர் ஆகியோர் தலைமை தாங்கினார்.

கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து சங்க மாநில, மாவட்ட மற்றும் ஒன்றிய பொறுப் பாளர்கள், அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் கெ. சக்திவேல், பொருளாளர் பொன்.ஜெயராம், துணைத் தலைவர்கள் பிரபு, வெங்கடாசலம், மாதேஸ்வரன், இணைச் செயலாளர்கள் தாமோதரன், திருநாவுக்கரசு, கருணாகரன், சிவகாமி, தணிக்கையாளர் சரவணன் மற்றும் உமாராணி (பேரூராட்சி மாநில தலைவர்), பிரபாகரன் (காவல்துறை அமைச்சு பணியாளர்), அழகிரிசாமி, நாக மணிகண்டன் (கிராம நிர்வாக அலுவலர் முன்னேற்ற சங்கம்) அன்பழகன், செந்தமிழன் (தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கம்), எல்.கே.சுப்பிரமணியம், சரவணன், திருஞானம், ரவிக்குமார், ஆறுமுகம், முருகேசன், ஸ்ரீரங்கன், தங்கவேல் (TNRDOA), செல்வகுமார் (வணிகவரி) சுரேஷ்குமார், இளங்கோ (மருந்தாளுநர் சங்கம்) செல்லமுத்து, (பொறியாளர் சங்கம்) முத்துக்குமார் (கால்நடைத் துறை), ஜீவானந்தம், செல்வராணி, பொன்ராம் ரத்னவேல்(மருத்துவ துறை), பழனிச்சாமி, பாலசுப்பிரமணியன் (நெடுஞ்சாலைத்துறை), சங்கர் (வேளாண்மைத் துறை), இக்பால் (கூட்டுறவுத்துறை), செல்வம் அண்ணாதுரை (சுகாதாரத் துறை), பழனியம்மாள், V. T. ராஜேந்திரன், சுந்தரம், பாஸ்கர், மலைக் கொழுந்தன் (சத்துணவு), சாந்தி, வசந்தி, ஜெயந்தி (அங்கன்வாடி சங்கம்), லட்சுமணன், சரவணன், ஸ்டாலின், ராஜகுரு (கல்வித் துறை), அரசக்குமார் (வருவாய்த் துறை கிராம உதவியாளர்) ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

### திருவள்ளூர்

மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாச்சியர் அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டங்கள் நடை பெற்றன. இதில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத் தின் மாவட்ட தலைவர் கோ.இளங்கோவன், தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநில பொதுச் செயலாளர் இரா.தாஸ், தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழக மாநில பொருளாளர் எம்.ஜம்பு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பொன்னேரியில் அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஜெ.வி.அருள்டேனியேல், கும்மிடிப்பூண்டியில் மணிகண்டன, வளவன் ஆகியோர் கலந்து கொண்டனர். மாவட்டம் முழுவதும் 12 வட்டாச்சியர் அலுவலகங்களில் நடைபெற்ற ஒரு நாள் வேலை நிறுத்த போராட் டத்தில் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழி யர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

### நாகை

தலைஞாயிறு வட்டாரத்தில் நடைபெற்ற ஜாக்டோ-ஜியோ அமைப்பின் வேலைநிறுத்த ஆர்ப்பாட்டத்திற்கு நாகை மாவட்ட ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்பாளர் பா.இரவி மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க வேதாரண்யம் வட்டத் தலைவர் கு.தமிழ்வாணன் தலைமை தாங்கினர்.

தலைஞாயிறு வட்டார ஒருங்கிணைப்பாளர் மு.சிவசுப்பிரமணியம் வரவேற்புரை ஆற்றினார்.

புள்ளியல் துறை சார்நிலை அலுவலர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் ப.விஜயகுமார் முன்னிலை வகித்தார். தமிழ்நாடு ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணியின் கே.என்.செந்தில்குமார், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் என்.ராஜேந்திரன், தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பா.அமிர்தலிங்கம், தமிழக தமிழாசிரியர் கழகத்தின் ட்டி.பாலு, தமிழ்நாடு பதவிஉயர்வு பெற்ற முதுகலை ஆசிரியர் சங்கத்தின் கே.அருள்குமரன், சத்துணவு ஊழியர் சங்கத்தின் எம். தமிழ்சேரன் உள்ளிட்டோர் கன்டன உரையாற்றினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் 76 பெண்கள் உட்பட 325 அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இறுதியாக தமிழ்நாடு உயர்நிலை மேனிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்கத்தின் கே.சுதாகர் நன்றியுரை வழங்கினார்.

### திருவாரூர்

10 வட்டாரங்களில் வேலை நிறுத்தம் மற்றும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திருத்துறைப் பூண்டியில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ்.துரைராஜ், மன்னார்குடியில் வெ.சோம சுந்தரம், ஆர்.சத்தியமூர்த்தி, கொரடாச்சேரியில் பி.ஆர்.ரவி ஆகியோர் உரையாற்றினர். மாவட்டம் முழுவதும் 11808 அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டனர். ❖

## ஜாக்டோ-ஜியோ மாவட்ட மாநாடுகள்

### திருவாரூர்

மாவட்ட மாநாடு கஸ்தூரிபா காந்தி மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் எஸ்.துரைராஜ், பி.ஆர்.ரவி, வெ.சோமசுந்தரம் மற்றும் ஆர்.சத்தியமூர்த்தி ஆகியோர் தலைமையில் 26.8.2017 அன்று நடைபெற்றது.

மாநாட்டில் அரசு ஊழியர் சங்க மாநிலச் செயலாளர் ஆர்.பன்னீர்செல்வம் துவக்கவுரை யாற்றினார். தமிழக தமிழாசிரியர் கழக மாநிலத் தலைவர் ச.மருதவாணன், தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்ற மாநிலத் தலைவர் இலா.தியோடர் ராபின்சன், அரசு பணியாளர் சங்க மாநில துணைத் தலைவர் டி.முருகானந்தம் ஆகியோர் எழுச்சியுரையாற்றினர்.

இதில் ஜி.பைரவநாதன், குரு.செல்வமணி, டி.எஸ்.ஆர்.கருணாநிதி, ஆர்.ஈவெரா, மா.தங்கராசு, ப.பாரதி, ந.செந்தமிழ்செல்வன், கோ.வீரமணி, எஸ்.தியாகராஜன், இரா.பால சுப்பிரமணியன், சு.இராஜேந்திரன், வி.வேலாயுதம், ஆர்.ஆன்ட்ரூஸ், வி.ராஜசேகரன், பூ.சிவராஜ், பா.பஞ்சாபிகேசன் ஆகியோர் கவன ஈர்ப்பு உரையாற்றினர். நிறைவாக மாவட்ட ஒருங்கிணைப்பாளர் செ.சோமசுந்தரம் நன்றி கூறினார். இதில் 117 பெண்கள் உள்ளிட்ட 625 பேர் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர்

மாவட்ட வேலை நிறுத்த ஆயத்த மாநாடு 26.8.17 அன்று கலைச் சங்க மைதானத்தில் மாவட்ட அமைப்பாளர் இளங்கோவன் தலைமை யில் நடைபெற்றது. தலைமை செயலக ஊழியர் சங்கத்தின் செயலாளர் வெங்கடேசன் விளக்க உரையாற்றினார். ஆசிரியர், அரசு ஊழியர்கள் 600-க்கும் மேற்பட்டவர்கள் கலந்துக் கொண்டனர்.

### கிருட்டிணகிரி

மாவட்ட ஜாக்டோ-ஜியோ வேலைநிறுத்த ஆயத்த மாநாடு 27.08.2017 அன்று மாலை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மில் நடைபெற்றது. பி.சந்திரன் (ஜியோ மாவட்ட ஒருங்கிணைப்பாளர்) மா.கிருஷ்ணமூர்த்தி (ஜாக்டோ ஒருங்கிணைப் பாளர்) ஆகியோர் தலைமையேற்றனர். ஆர்.நடராஜன் வரவேற்புரையாற்றினார்.

எஸ்.பார்த்திபன் (TNROA), சி.பி.ஜெயராமன் (TNSEA), க.மீனாட்சிசுந்தரம் (தொ.ப.மன்றம்), தீ.கோவிந்தன் (உ.நி.மே.நி.ப.ஆ.கழகம்) ஆகியோர் சிறப்புரையாற்றினர். ஜாக்டோ-ஜியோ பொறுப்பாளர்கள், துறைச் சங்க பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். ஆசிரியர்கள்-அரசு ஊழியர்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர். நந்தகுமார் நன்றி கூறினார். ❖

**மரங்களை வளர்ப்போம் மழை வளம் பெறுவோம்**




'**கா**ணக் கண்கொள்ளாக் காட்சி' என்ற சொற்றொடருக்கான உண்மை விளக்கமாக இருந்தது சென்னையில் ஆகஸ்ட் 5ல் மலைபோல் அலையெழுப்பிய அரசு ஊழியர்-ஆசிரியர் கூட்டம். மடை உடைத்து படையெடுத்த புதுவெள்ளம் போல் தடைகளைத் தகர்த்து சென்னை நோக்கி மாலை வரை வந்து கொண்டேயிருந்த ஊழியர் கூட்டம் நல்லதொரு விடை கொடுத்தது நம்மை மடையர்கள் என்று எடை போட்டவர்களுக்கு. நம்முடைய போராட்டங்களை இருட்டடிப்பு செய்து நாடகமாடிய ஊடகக்காரர்களும் வேறு வழியின்றி தலைப்பு செய்திகளில் நம்முடைய தலைகளைக் காட்டிட வேண்டிய தலைவிதியை எழுதியது ஆகஸ்ட் 5.

1988, 2003 ஆண்டுகளில் ஆசிரியர்கள்-அரசு ஊழியர்கள் கூட்டமைப்பு நடத்திய போராட்டங்களில் கலந்து கொண்ட ஆசிரியர்-அரசு ஊழியர்களின் எண்ணிக்கையை அபரிமிதமாக பின்னுக்குத் தள்ளி, பழைய வரலாறை உடைத்து புதிய வரலாறை படைத்தது அரசு ஊழியர்-ஆசிரியர் படை என்று சொன்னால் அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை. கையில் கோரிக்கை பதாகைகள், வாயில் வீர முழக்கங்கள், கண்களில் தீப்பொறிகள் என உணர்ச்சிப் பிழம்புகளாய் ஒன்று திரண்ட ஒரு லட்சம் ஆசிரியர்கள்-அரசு ஊழியர்கள் கூட்டம் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து தொலைக்காட்சி வழியாக வேடிக்கைப் பார்த்த அமைச்சர்களையும், அதிகாரிகளையும் வியர்த்து வெலவெலக்க வைத்துள்ளது.

மத்திய அரசின் ஊதிய மாற்றத்தின்படி தங்களுடைய சம்பளங்களை உயர்த்தி பெற்றுக் கொண்டதோடு அல்லாமல் நிலுவைத் தொகைகளையும் லட்சக்கணக்கின் பெற்றுக்கொண்ட ஐஏஎஸ் அதிகாரிகளும், எந்த ஒரு கமிட்டியோ, கமிஷனோ போடாமல் ஊதியத்தை நூறு சதவீத அளவுக்கு உயர்த்திக் கொண்ட அமைச்சர் பெருமக்களும், அருமைமிகு சட்டமன்ற உறுப்பினர்களும்தான் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் ஊதிய மாற்றங்களை 2016 ஜனவரி முதல் வழங்குவதற்கு கமிட்டி, கமிஷன், கால நீட்டிப்பு என்றெல்லாம் காரணம் காட்டி தமக்கொரு நியாயம்; ஊருக்கெல்லாம் அநியாயம் என்ற சர்வாதிகாரப் போக்கை கடைபிடித்து வருகிறார்கள். என்ன வெட்டி முறித்தீர்கள் என தட்டிக் கேட்க வேண்டிய நீதிமன்றமோ, நீங்கள் மட்டும் ஊதியத்தை உயர்த்திக் கொண்டது நியாயம்தானா என மனசாட்சியைத் தொட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள் என மனசாட்சியை மண் தோண்டி புதைத்துவிட்ட ஆட்சியாளர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளது.

தமிழ்நாடு மாணவர்கள் கூட்டமைப்பினர் என்ற பெயரில் வலைத்தளங்களில் ஒரு விமர்சனம் பரப்பப்பட்டு வருகிறது. ஓய்வூதியம், ஊதிய உயர்வு போன்ற சுயநலன் சார்ந்த பொருளாதார கோரிக்கைகள் மட்டுமே இப்போராட்டத்தில் கருப்பொருளாக வைக்கப்பட்டுள்ளதாகவும், தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவக் கல்வியை கேள்விக்குறியாக்கும் 'நீட்' தேர்வு குறித்தோ, விவசாயிகள் பிரச்னை குறித்தோ, டெல்டா பகுதியை சீரழித்து வரும் மீத்தேன் ஹைட்ரோ கார்பன் திட்டங்கள் குறித்தோ அரசு ஊழியர் சங்கத்தினர் பேசுவார்களா என்றும், இது குறித்து உணர்வுத் தளம் தவிர்த்த அறிவுத் தளத்தில் விளக்கம் தந்தால் நன்று என்ற விமர்சனங்கள் வலம் வருகின்றன. ஒரு பொறுப்புள்ள மாணவக் கூட்டமைப்பினர் தங்களுடைய விமர்சனங்களை முன் வைக்குமுன் சம்பந்தப்பட்ட அமைப்பினரை நேரடியாக தொடர்பு கொண்டு தகவல்களை சேகரித்துக் கொண்டு விமர்சிப்பது ஆரோக்கியமான விமர்சனத்திற்கு வழி வகுக்கும் அல்லது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணித்து விட்டாவது விமர்சிக்கலாம். எதையுமே செய்யாமல் நுனிப்புல் மேயும் போக்காக, இவ்வளவு கூட்டத்தை பார்த்துவிட்டு ஏதாவது ஏடாகூட விமர்சனம் செய்ய வேண்டும் என்ற போக்கில் விமர்சனம் செய்வது மாணவர் கூட்டமைப்பு என்பது 'சிறுபிள்ளை'த்தனமானது என்ற நினைப்பை ஏற்படுத்தி விடும்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 'நீட்' தேர்வு ரத்துக்காக, விவசாயிகள் பிரச்னைக்காக, மீத்தேன் ஹைட்ரோ கார்பன் திட்டங்களுக்காக மட்டும் போராடியும், எழுதியும் வரவில்லை. சமூக அக்கறையுள்ள அனைத்து விஷயங்களுக்காகவும் அது ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும் நடத்தி வருவதை மாணவத் தம்பிகள் செய்தித் தாள்களை படித்து தெரிந்து கொள்வது நல்லது. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக நடத்தப்படும் போராட்டத்தில் எல்லா பிரச்னைகளையும் எழுப்புவது பயனளிக்காது. அதேபோல் ஓய்வூதியம், ஊதிய உயர்வு போன்றவை சுயநல கோரிக்கைகள் என்று மாணவர் அமைப்பினர் போன்றோர் நினைப்பதும், எதிர்ப்பதும் தான் அரசுத் துறைகளில் ஊழல்கள் பெருகி விடுவதற்கான மூலகாரணங்கள் என்பதை உணர வேண்டும். அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களுக்கு ஊதிய மாற்றத்தின்படி வழங்க வேண்டிய ஊதியத்தை வழங்காவிட்டால் அரசு ஊழியர்கள் லஞ்சம், ஊழல் போன்றவற்றிற்கு தள்ளப்பட்டு விடுவார்கள் என்பதை உணர்ந்து அதை தடுப்பதற்காகவும், உரிமைகளைப் பெறுவதற்காகவும் நடத்தப்படும் இப்போராட்டத்தை சுயநலமானது என்று மாணவ அமைப்பினர் கொச்சைப்படுத்தி விமர்சித்திருப்பது, அவர்கள் இன்னும் அறிவுத் தளத்தில் இயங்க பக்குவப்படவில்லை என்பதைத்தான் காட்டுகிறது.

ஆக, நம்முடைய போராட்டமும், பெருங்கூட்டமும் எல்லாத் திசைகளிலும் அதிர்வலைகளையும், சில திசைகளில் அதிர்ச்சி அலைகளையும் ஏற்படுத்தியுள்ளது என்பது ஊடகச் செய்திகள், வலைத்தள விமர்சனங்கள் வாயிலாக அறிய வருகிறது. இது நம்முடைய ஒற்றுமைக்கு கிடைத்த இமாலய வெற்றியாகும். இந்த வெற்றி ஒவ்வொரு தனிப்பட்ட அரசு ஊழியர்-ஆசிரியரையும் சாரும். வைராக்கியத்தோடு, உணர்வுபூர்வமாக, இருக்கின்ற பணிகளை ஒதுக்கி வைத்துவிட்டு அரசாங்கத்தின் மீதுள்ள கோபத்தை அழுத்தமாக பதிவு செய்ய வந்தவர்களையும், ஆர்ப்பாட்டத்திற்கு வர முயன்று காவல் துறையினரால் தடுக்கப்பட்டு தாமதமாக வந்த, தாமதமாகி வர முடியாமல் போன மற்றும் வர மனமிருந்தும் உடல்நலக் குறைவோ அல்லது தவிர்க்க இயலாத முக்கிய காரணங்களாலோ வர முடியாதபோதும் அலைபேசி வாயிலாகவும், குறுஞ்செய்தி மூலமாகவும் நம்முடைய போராட்டத்திற்கு ஆதரவளித்த ஒவ்வொரு அரசு ஊழியர் மற்றும் ஆசிரியப் பெருமக்களுக்கும் வீரஞ் செறிந்த வாழ்த்துக்களை தனிப்பட்ட முறையில் தெரிவித்துக் கொள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கடமைப்பட்டுள்ளது.

அதேபோல இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கண்ணியத்தோடும், கட்டுக்கோப்புடனும், கடமை உணர்ச்சியுடனும் ஊழியர்கள் - ஆசிரியர்கள் செயல்பட்டு எந்தவித அசம்பாவிதமும் ஏற்படாமல் பெருமை சேர்த்துள்ளதும் பாராட்டப்பட வேண்டிய அம்சமாகும். ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செவ்வனே செய்து ஆச்சர்யப்படுத்திய சென்னை மாவட்ட ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பின்

ஒவ்வொரு பொறுப்பாளருக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பெருமைமிகு வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

இதே போராட்ட உணர்வுடனும், கட்டுக்கோப்புடனும், ஒற்றுமையுடனும் ஆகஸ்ட் 22ல் நடைபெறும் ஒருநாள் வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கி ஆட்சியாளர்களுக்கு நாம் யாரென்று இன்னும் அழுத்தமாக உணர்த்துவோம்!

**சரித்திரம் சுழலும் போதும், சமுத்திரம் குமுறும் போதும்**
**பொறுத்தவன் பொங்கும் போதும், புயல் மழை சீறும் போதும்**
**பறித்தவன் ஆதிக்கத்தைப் பசித்தவன் எதிர்க்கும் போதும்**
**மறித்தவன் வென்றதுண்டா? மறுப்பவன் புவியுலுண்டா?**

**- தணிகைச் செல்வன்** ❖

# வாசகர் கடிதம்

*ஆகஸ்ட் 2017 மாத இதழ் அட்டைபடங்கள் கண்ணீரை வரவழைத்தது. மறைந்துவிட்ட மகுடமல்ல ஆர்.எம்.எஸ். தீய சக்திகளுக்கு எதிராய் பார தீய ஜனதா என்று தொலை நோக்குடன் முழங்கிய அழுத்தம் திருத்தமான குரல் என்றும் ஊழியர்களின் மனங்களில் வைரமாய் பதிந்து அனைவரின் காதுகளிலும் ஒலித்திடும். மற்றவர்களுக்கு சொல்லுமுன் நாம் அதை கடைப்பிடிக்க வேண்டும் என்ற அடிப்படை. தனியரசுவிடம் இல்லை, நடப்பது தனி அரசுதான். பற்றற்ற நிலை கடைப்பிடிக்கும் துறவிகள் கவனர்களாகவும், முதல்வர்களாகவும் ஆகும் காலம் கலவரங்களால்தான் நிறைந்திருக்கும். இரத்தம் சிந்தி பெற்ற சட்டங்களோடு, வேர்வை சிந்தி பெற்ற ஊதியத்தோடு உதாரணமாய் வாழும் உழைப்பாளி மக்களிடம் மட்டுமே சிக்கனம் இருக்கும். சிறுகதை, கவிதை, துணுக்குகள் மற்றும் சட்டங்கள் என இதழ் சிறப்பு செய்கிறது.*

*- **சி. பாலசுப்ரமணியன்**, நாகப்பட்டினம்.*

*ஆகஸ்ட் திங்கள் அரசு ஊழியர் இதழ் அட்டை முதல் அட்டை அனைத்து விஷயங்களும் பயன் தரத்தக்க விதத்தில் இருந்தன. குறிப்பாக தோழர் ஆர்.எம்.எஸ். குறித்த கட்டுரை, படங்கள், கவிதை நெஞ்சம் நெகிழத்தக்க விதத்திலும் இருந்தன.*

*அரசு ஊழியர் சங்கத்தின் நிகரற்ற போராளி என்ற முறையில் ஆர்.எம்.எஸ். நிகழ்த்திய சாதனைகள் எண்ணிலடங்கா. அவைகளில் எல்லாம் கிஞ்சித்தும் குறைவுபடாத சாதனையாக ஏன் சிகர சாதனையாக நான் கருதுவது என்பது தனது உடலை அவர் தானம் செய்தது. இது வரவேற்கத்தக்கது. பின்பற்றத்தக்கது. துக்ளக் துர்வாசருக்கு பதில், தனியரசு எம்எல்ஏ பேச்சுக்கு பதிலடி இவைகளை வெளியிட்டு தூள்பரத்துகிறது அரசு ஊழியர் இதழ். பாராட்டுக்கள். தொடரட்டும் எதிர்ப்பலைகள்.*

*நீதித்துறையின் அவலங்கள் அலுவலக உதவியாளர் ஒருவருக்கு நீதிபதியால் ஏற்படுத்தப்பட்ட துன்ப, துயரங்களை, மன உளைச்சலைப் படித்து வேதனையடைந்தேன். பாதிக்கப்பட்ட ஊழியருக்கு நீதி/நிவாரணம் கிடைத்திட த.நா. நீதித்துறை ஊழியர் சங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி.*

*மகளிர் ஸ்பெஷல் பெண்களுக்கான குடும்ப சட்டங்கள் தொடர்பான விவரங்களை கேள்வி-பதில் வடிவில் அமைத்து தந்தமைக்கு பாராட்டுகள். பதில்கள் எளிதில் புரியக்கூடிய விதத்தில் இருந்தன. இப்பகுதி பெண் ஊழியர்களை மிகவும் ஈர்க்கும் என நம்புகிறேன்.*

*- **மு.சலீம் முகம்மது மீரான்**, தென்காசி*

*அரசு ஊழியர் சங்க வரலாற்று நாயகன் தீரமிகு போராளி, சொல்லின் செல்வன், என்றுமே நமது நெஞ்சத்தை விட்டு நீங்கா நினைவு நாயகன் தோழர் இரா.முத்துசுந்தரம் அவர்களின் மறைவு முன்னட்டையில் வைத்து அஞ்சலி செலுத்தியமைக்கு நன்றி. தலையங்கம், பொதுச் செயலாளர் மேசையிலிருந்து, இது ஜர்னலிசம் அல்ல ஜன்னலிசம், பெரணமல்லூர் சேகரின் கவிதை, நீதியே விதிகளை மீறினால் நியாயங்கள் நிலைப்பது எப்படி?, சுதந்திர நாட்டின் அடிமைகள், நேர்மை ஒரு வேலை சிறுகதை, பெண்கள் குடும்ப சட்டங்கள் குறித்த மகளிர் கட்டுரை அனைத்தும் மிகவும் சிறப்பாக இருந்தது.*

***- ரா.தட்சிணாமூர்த்தி***

# புரிந்து கொள்ளக்கூடிய புதிர்தான் புதிய ஓய்வூதியத் திட்டம்!

பயனளிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் ஓய்வு பெறும் ஊழியருக்கு அவர் கடைசியாக வாங்கிய ஊதியத்தில் 50 சதவீதம் அல்லது கடைசி பத்து மாத சம்பளங்களின் சராசரி அடிப்படையில் 50 சதவீதம் ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. இதில் ஓய்வூதியத்தின் மாற்றப்பட்ட மதிப்பு (commuted value of Pension) பணிக்கொடை, அகவிலை நிவாரணம் போன்றவை அரசாங்கத்தால் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. இந்த பயனளிப்பு ஓய்வூதிய திட்டத்திற்கு எதிராக புதிய ஓய்வூதியத் திட்டம் என்ற நடைமுறை 1.4.2003ம் தேதியிலிருந்து தமிழக அரசுப்பணியில் சேர்ந்தவர்களுக்கு கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் என்ற இந்த புதிய ஓய்வூதியத் திட்டம் இரண்டு அடுக்குகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. முதலாவது அடுக்கு கட்டாய ஒன்றாகும் இதன்படி 1.4.2003ம் தேதியிலும் அதற்குப் பின்னரும் அரசுப் பணியில் சேர்ந்தவர்களுடைய மாத ஊதியத்தில் (அடிப்படை ஊதியம் + அகவிலைப்படி) இருந்து 10 சதவீதம் பிடித்தம் செய்யப்படும். அரசும் அதற்கு இணையான தொகையை செலுத்தும். இவ்வாறு பிடித்தம் செய்யப்பட்ட தொகை திரும்பப்பெற முடியாத ஓய்வூதிய முதல் அடுக்கு கணக்கில் (Non-withdrawable Pension Tier I Account) வைக்கப்படும்.

இரண்டாவது அடுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்படி, பங்களிப்புத் தொகைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளக்கூடிய தனிப்பட்ட கணக்கில் பராமரிக்கப்படும். இதில் உள்ள தொகையை ஊழியரின் விருப்பத் தெரிவின் பேரில் திரும்ப பெற்றுக் கொள்ளலாம். திட்டம் A, திட்டம் B, மற்றும் திட்டம் C என வகைப்படுத்தப்பட்டுள்ள இந்த திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு இதன் ஆரம்ப சூத்திரங்களையும் முதலீடுகளின் விகிதாச்சாரத்தின் அடிப்படையில் கிடைக்கக்கூடிய நிலைய வருமானக் கருவிகள் மற்றும் சமநிலைகளையும் அரசு ஊழியர்களுக்கு விளக்க ஆவண பாதுகாப்பு முகைமை மற்றும் பல்வேறு ஓய்வூதிய நிதி மேலாளர்கள் இருப்பார்கள்.

இந்த புதிய ஓய்வூதிய திட்டத்திற்கு சட்டப்படியான அதிகாரம் வழங்கிட இந்திய அரசு, ஓய்வுதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணைய மசோதா, 2005ஐ (PFRDA Bill) அறிமுகப்படுத்தியது. தற்போது அது, நிதிநிலைக் குழுவின் பரிந்துரைகளைப் பெற்று மேற்படி மசோதாவில் கீழ்க்கண்ட திருத்தங்களை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. 1) 100 சதவீத நிதி வைப்பீடுகளையும் அரசுப் பத்திரங்களாக வைத்துக் கொள்ளுதல் 2) ஓய்வூதிய நிதி மேலாளர்களில் குறைந்த பட்சம் ஒரு நிறுவனமாவது அரசாங்க நிறுவனமாகவோ அல்லது அரசுக்கு சொந்தமான நிறுவனமாகவோ/நிறுவனங்களாகவோ அமைத்தல் 3) அயல்நாட்டு நிறுவனங்களில் நிதி முதலீடுகளை தடை செய்தல்.

மேற்கண்ட ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணைய மசோதாவில் அரசாங்கம் ஓய்வுதியப் பலன்களுக்கு வழங்கும் உத்தரவாதம் என்பது, பிரிவு 20(f)ன்படி ''சந்ததாதாரர்கள் பெறும் சந்தை அடிப்படையிலான உத்தரவாத முறை தவிர வேறு எந்த உள்ளார்ந்த அல்லது வெளிப்பாடான உறுதிப் பலன்கள் இத்திட்டத்தில் கிடையாது.'' என்று கூறப்பட்டுள்ளது. ஓய்வூதியப் பலன்கள் குறித்து எந்த உத்தரவாதமும் வழங்காத புதிய ஓய்வூதிய திட்டத்தில் பயனளிப்பு ஓய்வூதிய திட்டத்திற்கெதிரான மூன்றுவிதமான வாதங்கள் வைக்கப்படுகின்றன. 1) வரையறுக்கப்பட்ட பயனளிப்பு ஓய்வுதிய திட்டத்தின் நிலையற்ற நிதித்தன்மை 2) நிதி மேலாளர்களை தேர்வு செய்வதில் உள்ள குறைவான திட்டங்கள் மற்றும் 3) ஒழுங்கமைக்கப்பட்ட துறைகளில் உள்ள ஊழியர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் குறைவான பாதுகாப்பு.

பணியாளரின் பார்வையிலிருந்து இந்த புதிய ஓய்வூதிய திட்டத்தை ஆராயும் போது, அவரது பணிக்காலம் முழுமைக்கும் அவரது ஊதியத்தில் அடிப்படை சம்பளம் மற்றும் அகவிலைப்படியில் 10 சதவீதம் குறையும். இது ஒரு பணியாளரின் ஊதியத்தை பொறுத்த பாதிப்பாகும். மேலும் புதிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் ஓய்வு பெறும் ஒரு ஊழியர் பயனளிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்ற ஊழியரை விட 20 சதவீத ஓய்வூதியத்தை குறைவாகப் பெறுவார். பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வரையரை செய்யப்படும் ஓய்வூதியம் பணவீக்கத்தை ஒட்டி அட்டவணைப்படுத்தப்படாததால் அது அப்படியே ஓய்வூதியரின் வாழ்நாள் வரை இருக்கும். மேலும் வாழ்வாதார செலவு குறியீடு அதிகரிக்கும் நிலையில் ஓய்வூதியம் மேலும் குறையும். எனவே ஒரு ஊழியர் தனது பணிக்காலத்தில் இருக்கும்போது இழக்கும் ஊதியத்தோடு கூடுதலாக தனது ஓய்வூதியப் பலன்களிலும் கடுமையான இழப்பை சந்திப்பார்.

இந்த புதிய ஓய்வூதிய திட்டத்தின் சிறப்பு அம்சமாக, பலதரப்பட்ட வழிகளில் லாபம் பயக்கும் ஒன்றை தேர்ந்தெடுக்கும் முகமாக, அரசு பத்திரங்கள், பெருநிறுவன பத்திரங்கள், சாதாரண பங்குகள் அமைந்துள்ளன. அரசு வகுத்துள்ள நான்கு வகையான தெரிவுகளில் அனைத்து வாய்ப்புகளின் அடிப்படையில் ஆராய்ந்து பார்த்தால் ஏதாவது ஒரு வகையில் இறுதியாக பெற்ற ஊதியத்தில் 50 சதவீதத்தை மட்டுமே பாதுகாக்க இயலும். இதுகூட சந்தை அடிப்படையிலான உத்தரவாதத்தை தவிர வேறு எதுவும் கிடையாது. சந்தை சரக்குகளில் நிலையற்ற தன்மை புதிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் பெறும் ஓய்வூதியத்தில் கூடுதலையோ குறை வையோ கொடுக்கும்.

புதிய ஓய்வூதிய திட்டத்தில் கவனிக்கப்பட வேண்டிய மற்றுமொரு அம்சம் நிதி மேலாளர் தேர்ந்தெடுப்புகளே. பல்வேறு நாடுகளில் ஓய்வூதிய நிதி தனியார் மயமாக்கப்பட்ட அனுபவங்களைப் பார்க்கும் போது, அதற்காக தனியார் நிறுவனங்கள் வசூலிக்கும் சேவை கட்டணத்தையும் அந்த ஊழியரே செலுத்த வேண்டியுள்ளது. இதன் காரணமாகவும் ஓய்வூதியம் குறையும். குறிப்பாக சொல்ல வேண்டு மென்றால் புதிய ஓய்வூதிய திட்டங்களின் வாய்ப்புகள் மற்றும் நிதி மேலாளர்கள் என்பவை ஊழியர்களுக்கு எந்தவித பயனையும் தரப்போவதில்லை. அதிலும் சி மற்றும் டி பிரிவு ஊழியர்களை இது கடுமையான நிதிச்சுமையில் தள்ளிவிடும்.

வரைமுறைப்படுத்தாத துறைகளில் உள்ள பணியாளர்களையம் சமூக பாதுகாப்பு திட்டங்களின் கீழ் கொண்டு வரவேண்டும் என்பதே முன்மொழியப் படும் சட்டத்தின் குறிக்கோள்களில் ஒன்றாகும். புதிய ஓய்வூதிய திட்டத்தினை கொண்டு வருவதன் மூலம் அடுத்து வரும் 33 ஆண்டுகளில் சேமிப்பு என்ற ஒன்று இருக்காது. உண்மையில் புதிய ஓய்வூதிய திட்டத் தின்கீழ் அரசாங்கத்திற்கு பங்களிப்பு என்பதன் மூலமாக கணிசமாக அதிகப்படியான செலவினம்தான் உண்டு. எனவே வருங்காலத்தில் வரைமுறைப் படுத்தப்படாத துறைகளில் உள்ள பணியாளர்களை சமூக பாதுகாப்பு திட்டங்களின் கீழ் கொண்டு வர வேண்டும் என்ற ஆதிக்க வரம்பின் கீழ் இந்த புதிய ஓய்வூதிய திட்டம் எந்தவொரு பலனையும் அளிக்காது.

புதிய ஓய்வூதிய திட்டத்தினால் பாதிக்கப்படுவது யாரெனில், அரசு பணிக்கு புதிதாக சேர்ந்தவர்களே. உற்பத்தி, வேலை, தலைமுறை மற்றும் அதிக சமூக சேர்ப்புகள் என்ற நோக்கங்களைக் கொண்ட சமமான வளர்ச்சியை அடைய ஒரு நாட்டிற்கு அதற்கான நலனைப் புரியும் பங்களிப்பு தேவை. அதிலும் குறிப்பாக உள்கட்டமைப்பு மற்றும் சமூகத்துறை போன்றவற்றில் இந்த பங்களிப்பு வேண்டும். திறமையான பொது சேவை திட்டத்திற்கான இந்த அழைப்பானது, அந்த பொது சேவைக்கான சரியான நோக்கத்தை அடையச் செய்ய உதவக்கூடிய அரசு ஊழியர்களின் தரத்தைப் பொறுத்து அமையும். தனியார் துறையில் உள்ள சம்பளத் தொகுப்பினை அளிப்பது என்பது அரசுத்துறைக்கும் பொதுத் துறைக்கும் அடிக்கடி முடியாததாகிறது. திறமை வாய்ந்த இளைய சமுதாயம் குடிமுறை அரசுப் பணியை விட தனியார் துறை வேலைகளையே தேர்வு செய்கின்றனர். இந்த நிலைமையை வரையறுக்கப்பட்ட பயனளிப்பு ஓய்வூதிய திட்டத்தின் மூலம் ஓரளவுக்கு ஈடுகட்டலாம். இதுவரை அதுதான் நடந்து வந்திருக்கிறது. ஆனால் அதிலிருந்து விலகி பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தினை அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் செயல்படுத்துவதன் மூலம் இந்தத்துறைகளில் உள்ள ஓய்வுக்குப் பிறகு நிம்மதியான வாழ்க்கை என்ற வசீகரத்தை இழக்கச் செய்துவிடும். இது அரசு மற்றும் பொதுச் சேவைக்கு திறமை வாய்ந்த நபர்கள் வருவதை தடுத்துவிடும். நாடு அத்தகைய சூழ்நிலையை அடையவிட்டு விட்டால் அதன் விளைவு நாட்டையே அழிக்கக் கூடியதாக மாறிவிடும் என்பதை ஆட்சியாளர்கள், அதிகார வர்க்கம், அரசு ஊழியர், ஆசிரியர், அடிப்படை சேவகர் உட்பட அனைவரும் உணரவேண்டும்.

மேற்கண்ட சிந்தனைகள் - குறிப்பாக ஊழியர் களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்தில் நட்டம், புதிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியப் பலன்களை அடைவதற்கு அரசின் உத்தரவாதமின்மை, வரைமுறைப்படுத்தப்படாத துறைகளில் நிலையான வரையறுக்கப்பட்ட பயனளிப்பு ஓய்வூதிய திட்டத் திற்கான தனித்துவமான சாத்தியக்கூறுகள் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டம் போன்றவற்றின் அடிப் படையிலேயே நாம் புதிய ஓய்வூதிய திட்டத்தினை ஏற்றுக்கொள்ள முடியாமல் எதிர்க்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. எனவே புதிய ஓய்வூதிய திட்ட எதிர்ப்பு என்பது பணப்பலன்களை மட்டும் உள்ளடக்கியதல்ல, அது ஒரு சமூகத்தின் வளர்ச்சி, பாதுகாப்பு, சேவை மனப்பான்மை மற்றும் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் காலக்கருவி என்கிற புரிதல் அடிப்படை ஊழியர் முதல் ஆட்சியாளர்கள் வரை எல்லோரிடமும் ஊடுறுவ வேண்டும். அது மட்டுமே அடுத்த தலைமுறை மக்களை சேவை மனப்பான்மையோடு அரசு சேவகம் செய்ய உந்தும். தமிழக அரசு எதிர்கால நலன் கருதியாவது புதிய ஓய்வூதிய திட்டத்தை கைவிட முன் வர வேண்டும்.

**-அரசூழியன்**

## ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை
## ஆணைகளிட்டே யார் தடுத்தாலும் அலைகடல் ஓய்வதில்லை!



**த**மிழக அரசின் தலைமைச் செயலாளர் திருமதி கிரிஜா வைத்தியநாதன் இ.ஆ.ப. அவர்கள் 17.8.2017ம் தேதியிட்ட ஒரு அரசு கடிதத்தை வெளியிட்டுள்ளார். ஆகஸ்ட் 22ம் தேதி ஜாக்டோ-ஜியோ நடத்தும் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் பங்கேற்பவர்களுக்கு ஒரு நாள் ஊதியம் பிடித்தம் செய்யப்படும் என்று எச்சரிக்கை செய்திருப்பதோடு மட்டுமல்லாமல், வேலை நிறுத்தத்தில் பங்கேற்கும் அரசு ஊழியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், போராட்டத்தில் ஈடுபடும் பகுதி நேர, தினக்கூலி தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும் எனவும் மிரட்டும் தொனியில் எச்சரிக்கை செய்திருக்கிறார். இதுபோன்ற அரசு கடிதங்கள் வாடிக்கையான ஒன்றுதான் என்றாலும், பொதுவாக அவை வேலை நிறுத்தத்திற்கு முன் தினம் துறைத் தலைமைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் நிகழ்வாகும். ஆனால் இந்த சம்பிரதாய நடைமுறை இப்போது ஐந்து நாட்களுக்கு முன்னதாகவே மேற்கொள்ளப்பட்டு ஊடகங்கள் வாயிலாக ஊழியர்கள் மனதில் அச்சத்தை ஏற்படுத்தும் உத்தியாக கையாளப்பட்டுள்ளது.

ஒருநாள் வேலை நிறுத்தம் செய்தால் ஒருநாள் சம்பளத்தை அலுவலகத்தில் பிடித்துவிடுவார்கள் என்பதை அனைத்து ஊழியர்களும் அறிந்துள்ள நிலையில் இந்த அரசு கடிதத்தை முன்கூட்டியே வெளியிடக் காரணம் ஆகஸ்ட் 5ல் சென்னை நகரை உலுக்கிய அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் போராட்டம்தான். அந்தப் போராட்டத்தின் வீச்சும், வலிமையும், ஒன்றுபட்ட சக்தியும் இந்த அரசுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதற்கு இதுவே

சாட்சி. அதனால்தான் பிரித்தாளும் சூழ்ச்சியின் ஆரம்ப அத்தியாயத்தை அவசர அவசரமாக அரங்கேற்றியிருக்கிறது அதிகார வர்க்கம்.

சம்பளம் கிடையாது, விடுப்பு எடுக்க அனுமதியில்லை, விடுப்பு எடுத்தால் நடத்தை விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், விதிகளைக் காட்டி சதிவலை பின்னப் பார்க்கிறார் தலைமைச் செயலாளர். 1 ஜனவரி 2016 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய மாற்றத்தை, ஒன்னே முக்கால் ஆண்டுகளாக கொடுக்காமல் ஏமாற்றி வரும் அரசாங்கத்தின் போக்கு எந்த விதியின் கீழ் சரியானது என்பதை தலைமைச் செயலாளர் நியாயப்படுத்திவிட்டு, நடத்தை விதிகளின் கீழ் நமக்கு தண்டனை வழங்கட்டும் ஏற்றுக்கொள்வோம். ஐ.ஏ.எஸ் பதவியில் உள்ள நீங்கள் அனைவரும் ஊதிய மாற்றம், நிலுவைத் தொகை, இத்யாதிகளைப் பெற்றுவிட்டு ஊருக்கு உபதேசம் செய்வதும், சட்டமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் நூறு சதவீதத்திற்கும் மேலாக சம்பள உயர்வு பெற்றுவிட்டு சாமான்ய ஊழியன் ஊதிய ஊயர்வு கேட்டு போராடினால் சம்மட்டி கொண்டு வருவதும் என்ன நடத்தை? என்ன ஒழுங்கு? என்ன விதி? என்பதை விளக்கிவிட்டு எங்கள் மீது நடவடிக்கை எடுங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

உரிமைக்காக போராடுவது அனுமதிக்கப்பட்ட ஒன்றுதான் என்றபோதும் அதை இதுபோன்ற அறிவிப்புகள், அச்சுறுத்தல்கள் மூலம் அவற்றை ஒடுக்கப் பார்ப்பது எதிர்வினைகளைத்தான் ஏற்படுத்தும் என்பதை இந்த அரசாங்கமும், அதிகார வர்க்கமும் 22 ஆகஸ்டில் தெரிந்து கொள்ளும். போராட்டம் நடத்தினால் எஸ்மா, டெஸ்மா போன்ற அனைத்து சட்டங்களும் அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் மீது பாயும் என்ற கொடும் மிரட்டல்களையே புறந்தள்ளிவிட்டு, போராட்ட களம் புகுந்த அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களை இதுபோன்ற அரசு கடிதங்கள், அறிவிப்புகள் மூலம் அடக்கிவிட நினைப்பதை சிறுமை என்பதா மடமை என்பதா?

ஆக, அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களின் போராட்டங்களை அடக்குவதற்கு அரசாங்கம் தயாராகிவிட்டது என்பதை நாம் அனைவரும் கவனத்துடன் கருத்தில் கொள்ள வேண்டும். இத்தகைய அச்சுறுத்தல்களுக்கு இடையில்தான் நாம் நமது கோரிக்கைகளை, ஒன்றுபட்ட பெரும் சக்தியின் மூலமாக மட்டுமே வென்றெடுக்க முடியும். கோரிக்கைகளை வென்றெடுப்பதிலும், அதற்கான இயக்கங்களிலும், போராட்டங்களிலும் அரசு ஊழியர் சங்கத்தின் தலைமையின் கீழ் இயங்கிவரும் தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை ஊழியர் சங்கங்களின் போராட்டக் குழுவில் அங்கம் வகிக்கும் அனைத்துத் துறைச் சங்க நிர்வாகிகளும். முன்னணி ஊழியர்களும் அடக்குமுறைகளை எதிர்கொண்டு போராட்டங்களை முன்னெடுத்து பல கோரிக்கைகளை வென்றெடுத்த பின்புலத்தில் இன்றைய அரசின் அடக்குமுறைக்கு எவ்வித சமரசத்துக்கும் இடம் கொடுக்காமல் நமது இலக்கை அடையும் வரை போராட்ட களத்தில் முன்னிற்போம்.

மேலும், போராட்டத்தில் முடிவு கிட்டும் வரை உறுதியுடன் நிற்க வேண்டும். இது அனைத்துத் துறை ஊழியர் சங்கங்களின் போராட்டக் குழுவினால் முடியாவிட்டால் வேறு எவராலும் முடியாது என்ற நோக்கத்தோடு களப்பணியாற்றிட வேண்டும்.

“ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை, ஆணைகளிட்டே யார் தடுத்தாலும் அலைகடல் ஓய்வதில்லை” என்ற பாடலைப் பாடித்தான் அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் எழுச்சியை, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் இந்த அரசுக்கு புரியவைக்க வேண்டிய அவசியமில்லை.

அரசு ஊழியர்களே, ஆசிரியர்களே, ஒன்று திரட்டிய நம் ஒற்றுமை மூலம், மறுக்கப்படும் உரிமைகளை வென்றெடுப்போம். ஆகஸ்ட் 22ல் அரசுக்கு நாம் செய்வோம் இரண்டாவது எச்சரிக்கை. பிரித்தாளப் பார்க்கும் சூழ்ச்சியை ஒருக்காலும் அனுமதியோம் என சூளுரைப்போம். இப்போதைக்கு ஒரு நாள் மட்டும் அரசு நிர்வாகத்தை முடக்கி வைத்து ஆட்சியாளர்களை சிந்திக்க வைப்போம். சிந்திக்க மறுத்தால் செப்டம்பர் 7 முதல் நிரந்தர முடக்கத்தின் மூலம் நிர்பந்திப்போம். உரிமைகளை வெல்லும் வரை போராட்டக் களம் நிற்போம்! ❖

# மத்திய, மாநில அரசுகளின் ஓரவஞ்சனையால் பலிகடாவாக்கப்பட்ட அனிதா



தொழிலாளியின் மகள் டாக்டராகக் கூடாதா எனக் கேட்டு கண்ணீர் விட்டுக் கதறிய அனிதாவின் தந்தை சண்முகத்தின் கதறல் அனைவரையுமே கலங்கச் செய்தது.

மருத்துவராக வேண்டும் என்ற கனவோடு சிறுவயதிலிருந்தே அதற்காக தன்னை தயார்படுத்திக் கொண்டு வந்த அரியலூர் மாவட்டம் குழுமூர் கிராமத்தைச் சேர்ந்த மாணவி அனிதா, நீட் நுழைவுத் தேர்வால் தனது மருத்துவர் கனவு தகர்ந்ததால் நேற்று தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

சிறு வயதிலேயே தாயை இழந்த அனிதா, சொற்ப வருமானமே கொண்ட தொழிலாளியான தந்தை மற்றும் சகோதரர்களின் அன்பு, ஆதரவு, அரவணைப்பில் வாழ்ந்து வந்தார். வீட்டுக்கு ஒரு பெண் குழந்தை என்பதால் மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்ட அனிதாவுக்கு மருத்துவராகி ஏழை மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பது தான் கனவு. இந்த கனவை நனவாக்க அவரது தந்தையும், 4 சகோதரர்களும் சிறுவயதிலிருந்தே ஊக்கமளித்து வந்தனர்.

தனிப் பயிற்சிக்கு செல்லாவிட்டாலும், கிடைக்கும் நேரத்தை பயனுள்ள முறையில் பயன்படுத்தி பள்ளி தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவியாகவே இருந்து வந்த அனிதா, அந்த ஊரில் உள்ள மற்ற குழந்தைகளுக்கு படிப்பில் எடுத்துக்காட்டாகவே திகழ்ந்து வந்தார்.



அனிதாவின் தந்தை சண்முகம்

பிளஸ் 2 அரசுப் பொதுத் தேர்வில் 1,176 மதிப்பெண்கள் பெற்றபோது தான் நிச்சயமாக மருத்துவப் படிப்பில் சேர்ந்து விடலாம் என மிகவும் நம்பிக்கையோடும், மகிழ்வோடும் இருந்தார். ஆனால், மருத்துவப் படிப்புக்கு மட்டுமன்றி வாழ்க்கைக்கும் எமனாக வந்து நின்றது நீட் நுழைவுத் தேர்வு.

மருத்துவராக பார்க்க வேண்டிய மகளை மரண கோலத்தில் கண்டு கதறி அழுதார் தந்தை சண்முகம். மிகுந்த வேதனையிலும், விரக்தியிலும் இருந்த அவர் கூறியது:

“நானும், எனது மகன்களும் என 5 பேரும் கூலி வேலை செய்து அனிதாவை படிக்க வைத்தோம். அவரை டாக்டருக்கு படிக்க வைக்க வேண்டும் என்பது எங்கள் ஆசை. அதுபோலவே, எப்படியாவது டாக்டராகிவிட வேண்டும் என நினைத்து அனிதாவும் சிறு வயதிலிருந்தே கஷ்டப்பட்டு நன்றாக படித்தார்.

இந்த ஊரிலேயே நன்றாக படிக்கும் பெண் என பெயர் வாங்கினார். ஊரிலேயே முதல் டாக்டராகி விட வேண்டும் எனவும் விரும்பினார். நீட் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் இந்நேரம் அவருக்கு எம்பிபிஎஸ் படிக்க இடம் கிடைத்திருக்கும். அதை கெடுத்துவிட்டார்கள். இந்த நாட்டில் தொழிலாளிகளின் மகளும், தாழ்த்தப்பட்டவர்களின் குழந்தைகளும் டாக்டர் ஆகக் கூடாதா? நீட் தேர்வு காரணமாகத்தான் என் மகள் இறந்துள்ளார். இதற்கு மத்திய, மாநில அரசுதான் காரணம். அனிதாவுக்கு கால்நடை மருத்துவம் படிக்க வாய்ப்பு கிடைத்தது. ஆனால் அதை அவர் விரும்பவில்லை. இதுபற்றி எதுவும் எங்களிடம் பேசாமல் விரக்தியிலேயே இருந்துள்ளார்.

ஆசைப்பட்டபடி மருத்துவராக முடியவில்லை என மனசுக்குள்ளேயே புழுங்கி, இப்படி ஒரு முடிவை எடுத்துவிட்டார். உச்ச நீதிமன்றம் வரை சென்றும் என் மகள் மட்டுமல்ல, தமிழக மாணவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. இனிமேல் இதுபோல யாருடைய குடும்பத்திலும் நடக்கக் கூடாது” என்று கூறியபடி கண்ணீர் விட்டு கதறினார் சண்முகம்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் ‘நீட்’ எதிர்த்து தமிழகம் முழுவதும் நடைபெற்ற

போராட்டத்திற்கு நாம் ஆதரவளித்து வந்ததோடு, நாமும் இப்போராட்டத்தில் பங்கேற்றோம். மத்திய, மாநில அரசுகளின் ஓரவஞ்சனையால் இன்றைக்கு தமிழக மாணவி அனிதா அரசாங்கத்தால் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இது போன்ற சம்பவங்கள் மேலும் நடைபெறாமல் இருக்க அரசுகள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் எதிர்பார்க்கிறது.

## எம்.ஆர்.ஏ. மற்றும் என்.எஸ்.கே நினைவு கூட்டம்



*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கரூர் மாவட்டம் சார்பில் 30.08.2017 மாலை 6.00 மணி அளவில் அரசு ஊழியர் சங்கம் அரங்கில் தோழர். எம்.ஆர்.அப்பன் மற்றும் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் நினைவு அஞ்சலி கூட்டம் மாவட்ட செயலாளர் கெ.சக்திவேல் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட நிர்வாகிகள் கருணாகரன் (இணை செயலாளர்), பொன்.ஜெயராம் (பொருளாளர்), வட்ட நிர்வாகிகள் சுரேஷ்குமார், முத்துக்குமார், இளங்கோ, செல்வம், சங்கர், பழனிச்சாமி, அறிவழகன், ரவி, கண்ணன், பிரேம்குமார், ஆசிரியர்கள் காமராஜ், ராமசாமி, ஆடலரசன், வழக்கறிஞர் தமிழ் ராஜேந்திரன், ஆதி தமிழர் பேரவை சார்பில் முல்லையரசு, தமிழ் ஆர்வலர் ரமேஷ், சத்துணவு ஊழியர் பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள். ❖*

## உண்மை யறிந்தால், நீ உண்மை யறிந்தால்...

உண்மை யறிந்தால்-நீ உண்மை யறிந்தால்
உரிமைக்குப் போராடலாம்
அஞ்சாமல் துஞ்சாமல்-கரம்
கோர்த்துக் களம் காணலாம்

(உண்மை)

சாதி மதமின்றி தேசம் முழுவதும்
போராடிப் பெற்றதில்லையா - அந்த
சுதந்திரம் பறிபோக அனுமதி தந்தாலே
விதவித இன்னல் இல்லையா

(உண்மை)

அடிப்படைத் தேவைகள் வடிவம் தருவது
ஆள்வோர் ஆகலாமா-நாம்
தடியெடுத்தவனெல்லாம்
தண்டல்காரனாக
அனுமதி தரலாமா

(உண்மை)

அண்ணன் தம்பியாய் மாமன் மைத்துனனாய்
பழகி வந்தோமே-நம்மில்
மதவெறி புகுத்தி போதையை ஏற்றி
நிதம் போர் நிகழலாமா

(உண்மை)

மூட நம்பிக்கைகள் தேடி வரும்போது
புறந்தள்ள வேண்டாமா-அதை
அரசே தந்தாலும் முறத்தாலடித்து
துரத்த வேண்டாமா

(உண்மை)

**- பெரணமல்லூர் சேகரன்**

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com